விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தூரல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 14 வெள்ளிக்கிழமை (27.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

## மற்ற இனத்தவரை தொடர்ந்தும் அடிமைப்படுத்தவே

# சிங்கள ஆட்சியாளர்கள் எப்போதும் முயல்கின்றனர்

## தந்தை செல்வாவின் நினைவுரையில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண



(யாழ்ப்பாணம்) சிங்கள ஆட்சியாளர்கள் எப்போதும் தமது ஆதிக்கத்தின் கீழ் மற்றைய இனத்தவர் அடிபணிந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்படுகின்றார்கள் என நவ சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண யாழில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் பேருரையாற்றும்போது தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

## யுவதியின் தலைமுடியை வெட்டிய இளைஞன்

### பேஸ்புக் காதலால் விபரீதம்

(கரணவாய்)

பேஸ்புக்கில் உருவான காதல் தலைமுடி அறுப்பில் முடிவடைந்த சம்பவம் ஒன்று வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது. வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் 24

### வழங்கிய வாக்குறுதிகளை

## நல்லாட்சி அரசாங்கம் நிறைவேற்றவில்லை

### யாழில் விக்கிரமபாகு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு அரசாங்கம் வழங்குவதாக கூறிய சுயநிர்ணயம் இதுவரை 23

### அரச சார்பற்ற நிறுவனங்கள்

## மக்களை பிழையாக வழிநடத்துகின்றன

### ஜனாதிபதி மைத்திரி செவ்வி

(கொழும்பு)

காணாமற்போனோர் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பில் வடக்கில் நடக்கும் போராட்டங்களின் பின்னணியில் 23

## அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தொடர்ந்து அழுத்தம் வழங்குவோம்

### ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளுடைய விடுதலைக்காக தொடர்ந்தும் அழுத்தம் வழங்குவோம். அரசியல் கைதிகளுடைய விடுதலை தாமதிப்பது தொடர்பில் ஜனாதிபதி கூறுகின்ற காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சுமந்திரனின் வீட்டில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் விடுதலை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி 23

### மல்லாவி பகுதியில்

## கடும் காற்றுடன் மழை 6 கடைகள் சேதம்

(மல்லாவி)

மல்லாவி பகுதியில் நேற்று மாலை வீசிய கடும் காற்றினால் நகர்ப் பகுதியில் உள்ள 6 கடைகள் சேதமடைந்துள்ளன.

நேற்று மாலை 4.30 மணியளவில் மல்லாவி நகர்ப் பகுதியில் கடும் காற்றுடன் மழைபெய்துள்ளது.

இதனால் மல்லாவி நகர்ப் பகுதியில் பாரிய நெல் ஆலை 23

## வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் இரு குழுவாக பிரிந்து மோதல்

### ஏழாலை பகுதியில் பதற்றம்

(ஈச்சமோட்டை)

ஆலயத்தில் பூசை வழிபாட்டில் ஈடுபட்ட பக்தர்கள் இரு குழுக்களாக பிரிந்து மோதலில் ஈடுபட்டதனால் அப்பகுதியில் பெரும் பதற்றநிலை உருவாகியிருந்தது.

ஏழாலை பெரியதம்பிரான் உற்சவம் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு ஆரம்பமாகியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள்புடைசூழ பெரிய தம்பிரான் ஆலயம் நோக்கி பொங்கல் மடைப்பண்டம் எடுத்துச் செல்லும் போது முடிமன்னர் ஆலயத்தின் முன்னால் இடம்பெறும் வரவேற்பு பூசை மற்றும் வழிபாடு தொடர்பாக முடிமன்னர் 23

## ஆசிரியை தாக்கியதில் மாணவன் படுகாயம்

### வவுனியாவில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் மாணவன் ஒருவரை ஆசிரியை கண்மூடித்தனமாக தாக்கியதில் மாண 23

## இலங்கையில் அரசியல் கைதிகளோ இரகசிய தடுப்பு முகாம்களோ இல்லை

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தற்போது அரசியல் கைதிகள் எவரும் இல்லை. நாட்டில் எந்தவொரு இரகசிய தடுப்பு முகாமும் இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவித்துள்ளார்.

நிருபர் ஒருவருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் எந்த 23

## மதுபானங்கள், இறைச்சி விற்பனை செய்ய இரு நாட்கள் தடை

(கொழும்பு)

எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிய இரு நாட்களை அரச வெசாக் தினமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

2018 அரச வெசாக்வைபவத்தை முன்னிட்டு மதுபானசாலைகள், இறைச்சி விற்பனை நிலையங்கள், இறைச்சிக்காக விலங்குகளை உயிரிழக்க செய்யும் இடங்கள் கஸினோ சூதாட்ட நிலை 23

## புதிய அமைச்சரவை ஜனாதிபதி மைத்திரியின் நேரடிக் கண்காணிப்பில்

(கொழும்பு)

புதிய அமைச்சரவை நியமனம் இடம்பெற்ற கையோடு அனைத்து அமைச்சுக்களையும் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் 23

## புலிகளின் செயற்பாடுகள் வடக்கில் தலைதூக்கியுள்ளன

### பிக்கு அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கில் மீண்டும் விடுதலைப் புலிகள் சார்பு செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளன. விடுதலைப் புலிகளுக்கு சிலை கட்ட முயல்கின்றனர். அவற்றை தடுத்து நிறுத்தவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பௌத்த பிக்கு அமைப்புக்கள் சில கடிதம் அனுப்பிவைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையின் பின்னணியில்தான் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கட்டுமானப் பணிகளை இடைநிறுத்துமாறு கொழும்பு 23

## மத்திய வங்கியின் ஆண்டு அறிக்கை

### நிதி அமைச்சிடம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் 2017 ஆம் ஆண்டு அறிக்கை, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளதாக 23

## கொக்குவிலில் வாள்வெட்டு; இளைஞர் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் முதலி கோவில் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆவாக் குழுவைச் சேர்ந்தவரே இந்த தாக்குதலை மேற்கொண்டார். அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் வாள்வெட்டு நடத்திய சந்தேக நபரையும் தேடி வருகின்றனர். (ம)

# ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்து ரணிலை வீட்டுக்கு அனுப்புவோம்

## அம்பாந்தோட்டை மேயர் எராஜ் ரவீந்திர பெர்ணான்டோ

(அம்பாந்தோட்டை)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் இணைந்து பிரதமர் ரணிலை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவோம் என அம்பாந்தோட்டை மேயராக தெரிவுசெய்யப்பட்டுள்ள எராஜ் ரவீந்திர பெர்ணான்டோ சூளுரைத்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அம்பாந்தோட்டை மாநகர சபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியிருந்தது. எனினும், பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் அதன் ஆட்சி அதிகாரத்தை நேற்று வியாழக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைப்பற்றியதோடு, மேயராக எராஜ் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்குறித்தவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

நாட்டின் அபிவிருத்தி கடந்த மூன்று வருடங்களுக்கு அதிகமாக தடைப்பட்டு காணப்படுகிறது. மத்திய வங்கியில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடியுடன் தொடர்புடைய பிரதமர் இருக்கும் இந்த ஆட்சியை விட்டு, 16 பேர் வெளியேறியுள்ளனர். பிரதமருக்கு எதிராக எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கை இதுவாகும். எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் இவர்கள் 16 பேரும் எதிரணியில் அமர்வார்கள்.

இரண்டாவது நடவடிக்கையாக இன்று நாம் அம்பாந்தோட்டை மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளோம். ஏற்கெனவே கொள்ளையிடப்பட்ட மத்திய வங்கியின் பணத்தை எதிர்வரும் ஒன்றரை வருட காலத்தில் மீளப் பெற்று, அபிவிருத்தியை முன்னெடுப்போம்.

எமது மாவட்டத்தில் குறைந்த அபிவிருத்திப் பணிகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இழந்த அபிவிருத்தியை மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மீளக் கொண்டு வருவோம்.

மேலும், எமது நாட்டின் சொத்துக்களை குறைந்த விலைக்கு வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்கின்றனர். இதனை முறியடிக்கும் நடவடிக்கையாக இன்று அம்பாந்தோட்டையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு நாம் விலகவில்லை. ஜனாதிபதி மைத்திரியுடனும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, புதிய பயணத்தை ஆரம்பிக்க நாம் தயாராக உள்ளோம் என்றார். (ம)

## மின்குமிழ்களை குறைந்த விலையில் வழங்க திட்டம்

மின்சாரத் தேவை அதிகமாகவுள்ள இந்த காலப்பகுதியில் low-cost மின் குமிழ்களின் பாவனை அதிகரித்துள்ளதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

low-cost மின் குமிழ்களின் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில், அந்த குமிழ்களை குறைந்த விலையில் வழங்குவதற்கு மின் சக்தி எரிசக்தி அமைச்சு விசேட வேலைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்தியுள்ளதாக, அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்தார். (ம)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 43 வயதுடைய அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**0778029712** (3376)



## மரண அறிவித்தல்

## மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (முத்து)



தும்பளையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கரணவாய் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (முத்து) நேற்று (26.04.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை ஆரோக்கியத்தின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிலிப் பாக்கியம் அவர்களின் பாசமிகு மருமகனும், கிரேஸ்ருக்மணியின் (மணி) அன்புக் கணவரும், மேசியின் பாசமிகு தந்தையும், பிரசன்னானின் அன்பு மாமனாரும், பிரம்மியாவின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 27.04.2018 வெள்ளிக்கிழமை (இன்று) பி.ப 3.00 மணியளவில் கரவை தேவமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். பின்னர் நல்லடக்கத்திற்காக கரவை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கரணவாய் கிழக்கு, கரவெட்டி.**

**தகவல்:குடும்பத்தினர் 0213218149**

(சி-2414)


# யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால் நேற்று 37 பேருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் 37 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 27 பேரும சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் 7 பேரும், டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 3 பேருமென, மொத்தமாக 37 பேருக்கு ஏதிராக, கோப்பாய் பொலிஸாரால், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்குகள், யர்ழ்ப்பாணம் நீதவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது, மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய 27 பேர் மீதும் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டதோடு, அவர்களில் மூவர், அரச உத்தியோகத்தர்களென்றும் பொலிஸாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து, அரச உத்தியோகஸ்தர்கள் மூவருக்கும் தலா 7ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் ஆயிரத்து 500 ரூபாய் அரச செலவும் விதித்த நீதவான், அவர்கள் மூவரின் சாரதி அனுமதிப் பத்திரங்களை யும் 9 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்கு மாறும உத்தரவிட்டார். மேலும், அதே குற்றச்சாட்டின் கீழ் ஆஜர்செய்யப்பட்ட ஏனைய 24 பேருக்கும், தலா 7 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் 50 மணித்தியாலங்களுக்குக் குறையாத சமூகப் பணியில் ஈடுபடவேண்டுமென்றும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, அவர்கள் 24 பேரினதும் சாரதி அனுமதிப் பத்திரங்களை, 9 மாதங்களுக்கு இடைநிறுத்துமாறும், நீதவான் உத்தரவிட்டார். இதேவேளை, புதுவருட தினத்தன்று சட்டவிரோதமாக சாராயத்தை விற்பனை செய்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், மேலும் 5 பேருக்கு, சட்டவிரோதமாக்ச் சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், டெங்கு நுளம்பு பெருகக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த 3 பேருக்கு, தலா ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# ஐ.தே.கவின் புதிய மாற்றத்திற்கு செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கட்சியின் உயர் பதவிகளுக்கான புதிய உறுப்பினர்களுக்கு அந்தக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இதனைக் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போதே உறுப்பினர்களின் புதிய பதவி நியமனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, கட்சியின் பொதுச் செயலாளராக அமைச்சர் அகில விராஜ் காரியவசமும் தவிசாளராக அமைச்சர் கபீர் ஹசீமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாசவும், உப தலைவராக ரவி கருணா நாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தேசிய அமைப்பாளராக நவீன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் பொர்ருளாளராக ஹர்ச டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் தொடர்பாடல் செயலாளராக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும், வணிக சங்க செயலாளராக அஜித் பி. பெரேராவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஐக்கிய தேசிய கட்சியின் பதவிகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக அதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட அரசியல் சபை அலரிமாளிகையில் கூடிய போதே, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. (ம)

# அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகனின் சித்திரைத் தேர் வெள்ளோட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் திருக்கோவில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற உள்ளது.

இவ்விழாவிற்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு அருளாசி வழங்கவுள்ளார். நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த் திருவிழா இடம்பெறும். (ம)


## ஜனா டிஜிற்றல் பிறின்டிங் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை

01. வரவேற்பாளர்
02. ரைப் செற்றிங்
03. Designing (CorelDRAW, Photoshop)
04. Screen printing
05. வெளிக்கள உத்தியோகத்தர்



தொடர்பு :- இல.246, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.

**071 112 2004**

(C-2417)

# பொதுத் தேர்தல் தான் நெருக்கடிக்குத் தீர்வு!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் தவறான கொள்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமற்றநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பான யோசனை குறித்து கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்ட யோசனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே அது குறித்து தீர்மானிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

உரிய நிர்வாகம் இல்லாததால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது காணப்படும் ஸ்திரமற்ற நிலை அனைவரையும் பாதிக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி தனது வீட்டின் பொருட்களை விற் பது போல எவரும் தேசிய சொத்துக்களை விற்கக்கூடிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வைக் காண்பதற்கு பொதுத்தேர்தலை நடத்துவதே ஒரே வழியெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற முடியும் என தான் கருதவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# ஹரின், அஜித்திற்கும் ஐ.தே.கவில் பதவிகள்





(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மேலும் இரு அமைச்சர்களுக்கு கட்சிப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தகவல் தொடர்பு செயலாளராகவும், அமைச்சர் அஜித் பீ. பெரேரா கட்சியின் தொழிற்சங்கச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போதே இந்த இரு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் அரசியற்குழுக் கூட்டத்தில், கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு புதிய பொதுச் செயலாளராக அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமும் தவிசாளராக அமைச்சர் கபீர் ஹாசீமும், தேசிய அமைப்பாளராக நவீன் திஸாநாயக்க, பிரதித் தலைவராக சஜித் பிரேமதாசவும், ரவி கருணாநாயக்க உப தலைவராகவும், கட்சியின் பொருளாளராக ஹர்ச டி சில்வாவும் பெயரிடப்பட்டிருந்தனர். இந்நிலையில், குறித்த பதவி நிலைகளுக்கு நேற்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பௌத்த பிக்கு உட்பட 10 மாணவர்கள் கைது

(கொழும்பு)

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது குழப்ப நிலையை ஏற்படுத்திய பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிக்கு மாணவர் ஒருவருடன் சேர்த்து மேலும் 9 மாணவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது குழப்ப நிலையை தோற்றுவித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் அத்துமீறி உட்பிரவேசிக்க முயற்சித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் சம்மேளனத்தால் நேற்றுப் பிற்பகல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

2016/2017 ஆம் கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், பௌத்த சமயம் மற்றும் பௌத்த ஆய்வுத்துறைக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்வது இடைநிறுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# அம்பாந்தோட்டையில் மகிந்தவின் ஆதரவுடன் ஐ.ம.சு.முன்னணி ஆட்சி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாநகர சபையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளது.

மாநகர சபை முதல்வராக இராஜ் பெர்னாண்டோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, அம்பாந்தோட்டை மாநகர சபையில் அதிக ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய அரசிற்கு மகஜர் அனுப்ப வேண்டும்

## பரு. பிரதேச சபை உறுப்பினர் பிரேமதாஸ் வலியுறுத்து

(கரணவாய்)

ஆனந்த சுதாகரன் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி மத்திய அரசிற்கு மகஜர் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் பிறேமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் முதலாவது அமர்வு தவிசாளர் அ.கா.அரியகுமார் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் கன்னியுரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை பிரதேச சபையில் உள்ள வாகனங்கள் மருதங்கேணியில் உள்ள உப அலுவலகங்களுக்கும் நகர்த்தப்பட வேண்டும். தென்னிலங்கையில் இருந்து வரும் எவருக்கும் எமது பிரதேச சபை எல்லைக்குள் எந்தவிதமான வேலைக்கும் அனுமதி கொடுக்கக்கூடாது.

மருதங்கேணியில் இருந்து கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்திற்கு பிரதேச சபை ரீதியாக எந்த அனுமதியும் வழங்கக்கூடாது, எனவும் தனது கன்னியுரையில் தெரிவித்தார். (இ-60)

## கோத்தபாயவை நெருங்கும் மற்றுமொரு வழக்கு

# அவன்காட் ஆயுதக் கப்பல் மேலாளர் நேற்றுக் கைது

(கொழும்பு)

அவன்காட் ஆயுதக் களஞ்சியக் கப்பலின் செயற்பாட்டு மேலாளராக செயற்பட்ட ஓய்வு பெற்ற கடற்படை லெப்டினன் கப்டன் நிலுபுல் கொஸ்தா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்பிணை கோரிய இவர் தாக்கல் செய்திருந்த மனு, காலி நீதவான் நீதிமன்ற பிரதான நீதவான் நிஷாந்த பீரிஸினால் மறுக்கப்பட்ட நிலையில், அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அவன்காட் நிறுவனத்திற்கு அனுமதியளித்ததன் மூலம் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை செயற்படுவதற்கு இடமளித்தமை தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட பலருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அர்ஜுன் மகேந்திரன் தொடர்பில் நீதிமன்றம் நேற்று அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை கைது செய்து நாட்டுக்கு அழைத்துவர தேவையான ஆவணங்களின் பிரதிகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மத்திய வங்கியின் முறிமோசடி வழக்கில் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேனா ஆகியோரை அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# பல்கலைக்கழக மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம்



(கொழும்பு)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மாணவர்களை கலைப்பதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பிக்குகள் சம்மேளனத்தால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் நேற்று பிற்பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதன்காரணமாக கொம்பனித் தெருவில் இருந்து கொழும்பு நகர மண்டபம் வரையான யூனியன் பிளேஸ் பாதையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மே 7 ஆம் திகதியே விடுமுறை


(கொழும்பு)

மே மாதம் 7 ஆம் திகதி தொழிலாளர் தினம் கொண்டாடுவதன் பொருட்டு அன்றைய தினத்தை விடுமுறை தினமாக தொழில் ஆணையாளர் ஏ.விமலவீர அறிவித்துள்ளார்.

மே 7 ஆம் திகதி தொழிலாளர் தினத்தை கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி தனியார்துறை மற்றும் அரச நிறுவனப் பணியாளர்களுக்கு மே 7ஆம் திகதியே விடுமுறை தினமாக அறிவிக்க முடியும் என தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# பஞ்சரானது அஷ்வினின் பஞ்சாப்



ஐ.பி.எல்., லீக் போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்த பஞ்சாப் 13 ஓட்டங்களால் வீழ்ந்தது.

இந்தியாவில் 11ஆவது சீசன் ஐ.பி.எல்., 'ரி20' தொடர நடக்கிறது. இதன் 25ஆவது லீக் போட்டியில், நேற்று அஷ்வினின் பஞ்சாப் அணி, ஹைதராபாத்தை சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் அஷ்வின், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பஞ்சாப் அணியில் யுவராஜ் சிங், மில்லர் நீக்கப்பட்டு, மனோஜ் திவாரி, கெய்ல் சேர்க்கப்பட்டனர்.

**மணிஷ் அரைச்சதம்**

ஹைதராபாத் அணிக்கு அணித் தலைவர் வில்லியம்சன், ஷிகர் தவான் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ராஜ்புட் 'வேகத்தில்' மிரட்டினார். இவரிடம் சிக்கிய வில்லியம்சன், ஐ.பி.எல்., அரங்கில் முதன் முறையாக 'டக்' அவுட்டானார். தவான் (11), சகாவும் (6) இவரிடம் சிக்கினர். சகிப் அல் ஹசன் (28) கைவிட்டார். 4, 9, 46 என, மூன்று முறை தப்பிப் பிழைத்த மணிஷ் பாண்டே, அரைச்சதம் அடித்து (53) திரும்பினார்.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி, 6 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் எடுத்தது.

பஞ்சாபின் ராஜ்புட் 5 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

**சரிந்த துடுப்பாட்டம்**

எளிய இலக்கைத் விரட்டிய பஞ்சாப் அணிக்கு லோகேஷ் ராகுல் (32), கெய்ல் (23) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அகர்வால் 12, கருண் நாயர் 13, பின்ச் 8 என சொதப்பினர். திவாரி (1), டை (4), ஸ்ரண் (2) என, வரிசையாக திரும்பினர். அஷ்வினும் (4) அதிர்ச்சி கொடுத்தார். 55/0 என இருந்த பஞ்சாப், 101 ஓட்டங்களுக்கு, 9 விக்கெட்டுக்கள் என, சரிந்தது. கடைசியில் ராஜ்புட் (8) ஆட்டமிழக்க, பஞ்சாப் அணி 19.2 ஓவர்களில் பஞ்சாப் 119 ஓட்டங்களுக்கு சுருண்டு, 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

**5**

பஞ்சாப் வீரர் ராஜ்புட், 14 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள் சாய்த்தார். ஐ.பி.எல்., அரங்கில் பஞ்சாப் பந்துவீச்சாளரின் சிறந்த பந்துவீச்சு இதுவாக அமைந்தது. இதற்கு முன், 2012ல் புனே வோரியர்ஸ் அணிக்கு எதிராக, மஸ்கரானஸ் 25 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருந்தார்.

**50**

நேற்று அகர்வாலை ஆட்டமிழக்கச் செய்த ஹைதராபாத்தின் சகிப் அல் ஹசன், ஐ.பி.எல்., அரங்கில் 50 விகெட்டுக்கள் என்ற மைல் கல்லை எட்டினார்.


**களத்தடுப்பு மோசம்**

நேற்று பஞ்சாப் அணியின் களத்தடுப்பு மோசமாக இருந்தது. மணிஷ் பாண்டே, 4, 9, 46 ஓட்டங்களில் கொடுத்த மூன்று பிடிகளை கோட்டை விட்டனர். ப்தான் 7 ஓட்டங்களில் கொடுத்த வாய்ப்பை திவாரி நழுவவிட்டார்.




# தோனி மூச்சுவிடுறதே... உறுமல்தான்

## ஹர்பஜன் சிங் பாராட்டு



"யாரு திமில, யாரு அடக்கப்பார்க்கறது, தோனி மூச்சு விடுறதே, இங்க உறுமல் சத்தம் தான்," என, சென்னை வீரர் ஹர்பஜன் சிங் பாராட்டு தெரிவித்தார்.

இந்தியாவில் 11ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இரு ஆண்டு தடைக்குப் பின், தோனி தலைமையில் மீண்டும் சென்னை அணி களமிறங்கியது.

அணியில் 'சீனியர்கள்' அதிகம் உள்ளனர் என விமர்சனம் எழுந்தது. மாறாக, இதுவரை களமிறங்கிய 6 போட்டிகளில் 5இல் வெற்றி பெற்றது.

ஒவ்வொரு போட்டியிலும் ஒரு வீரர், வெற்றிக்கு கைகொடுத்து அசத்துகிறார். பிராவோ (68 ஓட்., எதிரணி-மும்பை), சாம் பில்லிங்ஸ் (56, கொல்கத்தா), வோட்சன் (106, ராஜஸ்தான்), அம்பதி ராயுடு (79, ஹைதராபாத்) வரிசையில் தற்போது தோனியும் (70, பெங்களூர்) இணைந்துள்ளார்.

பெங்களூருக்கு எதிராக, வழக்கமான 'ஸ்ரைலில்' கடைசி ஓவரில் சிக்சர் அடித்து, வெற்றி பெற்றுக் கொடுத்தார் தோனி.

இதுகுறித்து தோனி கூறியதாவது,

ஆரம்பத்தில் முக்கிய வீரர்களை இழந்ததால், பெங்களூரு அணி இலக்கை எட்டுவது கடினமாக இருந்தது. இருப்பினும், இது சிறிய மைதானம், பனிப்பொழிவும் சற்று இருந்தது. கடைசியில் எங்களது திட்டப்படி அனைத்தும் நடக்கவில்லை என்றாலும், எல்லாம் நல்ல விதமாக முடிந்தது. மற்றபடி, போடடிகளில் ஒரு நாள் வெலலாம், மறுநாள் தோற்கலாம்.

ஆனால், 'பினிஷ்' வேலை என்பது, சரியாக 'பினிஷிங்' செய்வதுதான். இந்த அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தோனி கூறினார்.

வெற்றி குறித்து சென்னை அணி வீரர் ஹர்பஜன் சிங், தமிழில் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,' வாடிவாசல் திறந்தவங்க கிட்டயே, வரிஞ்சு கட்டறதா, யாரு திமில, யாரு அடக்கப் பார்க்கறது, தோனி மூச்சு விடுறதே, இங்க உறுமல் சத்தம்தான். நீ, நொறுக்கு பங்கு,' என, தெரிவித்துள்ளார்.

**6 ஓவர் விளாசல**

சென்னை அணி, இத் தொடரில் கடைசி 6 ஓவர்களில், ஓட்ட மழை பொழிகிறது. மும்பை (72), கொல்கத்தா (77), பஞ்சாப் (80), ராஜஸ்தான் (51), ஹைதராபாத் (76), பெங்களூரு (81) என, 6 அணிகளுக்கு எதிராக, 36 ஓவர்களில் மட்டும் 437 ஓட்டங்கள் குவித்தது.

**உண்மையான 'பொஸ்'**

தோனி குறித்து சென்னை அணியின் முன்னாள் ஆரம்ப வீரர் மத்யூ ஹைடன் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,'

அணித் தலைவர் தோனியை பொறுத்தவரையில் வயது என்பது ஒரு எண் தான். இவர்தான் உலகின் உண்மையான 'பொஸ்' ('யுனிவர்சல் பொஸ்'). அசத்திய அம்பதி ராயுடு ஒரு 'ஜஸ் மேன்'. சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார் ராயுடு.

இதனால், இவர், மீதமுள்ள போட்டிகளிலும் தன் மீது ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளார்,' என்றார்.

# 'குட்-பை' சம்பியன்ஸ் டிரொபி



சம்பியன்ஸ் டிரொபி தொடருக்கு ஐ.சி.சி., விடை கொடுத்தது. 2021ல் இந்தியாவில் நடக்க இருந்த சம்பியன்ஸ் டிரொபி தொடர், 'ரி20' உலக கிண்ண தொடராக மாறுகிறது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) சார்பில் ரொப் 8' அணிகள் மட்டும் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிரொபி ('மினி' உலக கிண்ணம்') தொடர் நடத்தப்படுகிறது.

கடைசியாக, 2017இல் இங்கிலாந்தில் நடந்த தொடரில் பாகிஸ்தான் கிண்ணம் வென்றது.

நான்கு ஆண்டுக்கு ஒரு முறை உலக கிண்ணத் தொடர் நடக்கும் நிலையில், சம்பியனஸ் டிராபி தேவையா என விமர்சனம் எழுந்தது.

தற்போது, கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் வகையில், சம்பியன்ஸ் டிரொபி தொடரை கைவிடுவது என, ஐ.சி.சி., முடிவு செய்துள்ளது.

இதற்குப் பதில், 2020ஐ (அவுஸ்திரேலியா) தொடர்ந்து, 2021ல் இந்தியாவில் 'ரி20' உலக கிண்ணத்தொடர் நடக்கும்.

இது குறித்து ஐ.சி.சி., தலைமை செயல் அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் கூறுகையில்,

"உலக கிண்ணத் தொடர நடத்தியபின், மீண்டும் எதற்கு சம்பியன்ஸ் டிரொபி நடத்த வேண்டும். இதனால், 2021ல் நடக்க இருந்த சம்பியன்ஸ் டிரொபி, 'ரி20' உலக கிண்ணமாக மாற்றப்படுகிறது.

இதற்கு, இந்திய கிரிக்கெட் சபையும் சம்மதம் தெரிவித்தது," என்றார்.

**104 அணிகள்**

இதனிடையே, ஐ.சி.சி., யிடம் உறுப்பினர்களாக உள்ள 104 அணிகளுக்கும், சர்வதேச 'ரி20' அந்தஸ்து தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

வரும் 2018, ஒக்டோபர், 2019, மே முதல், 'ரி20' வீரர், வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியல் வெளியாக உள்ளது.

# 12ஆவது ஐபிஎல் தொடருக்கு சிக்கல்

அடுத்த ஆண்டு இந்திய பாராளுமன்றத் தேர்தல் நடக்க உள்ளதால், ஐபிஎல் தொடரை ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐபிஎல்ரி20 கிரிக்கெட்போட்டித் தொடரின் 11ஆவது சீசன் தற்போது நடந்து வருகிறது.

12வது சீசன் ஐபிஎல் போட்டிகள், அடுத்த ஆண்டு மார்ச் 29ஆம் திகதி தொடங்கி, மே 19ஆம் திகதி வரை நடக்க உள்ளதாக கூறப்படுகிறது.

அந்நேரத்தில் இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தல் நடக்க இருப்பதால், ஐபிஎல் போட்டிகளை வேறு நாட்டில் நடத்த ஏற்கெனவே திட்டமிடப்பட்டது.

அதன்படி ஐபிஎல் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடத்த தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போதும், 2014-ம் ஆண்டு நடைபெற்ற ஐபிஎல் தொடரின் முதல் இரண்டு வார ஆட்டங்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடத்தப்பட்டது.

அதேபோல அடுத்த ஆணடும், சில போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்ஷில், மீதமுள்ள போட்டிகளை இந்தியாவிலும் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.


பாராளுமன்ற தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னரே இதுகுறித்து முடிவு செய்ய முடியும்.

2009ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது சீசன் ஐபிஎல் போட்டிகளைப் போலவே, அடுத்த ஆண்டும் தென்னாபிரிக்காவில் நடத்த முதலில் திட்டமிடப்பட்டது.

ஆனால், இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நேர வித்தியாசம் காரணமாக, ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடத்துவது என தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஹோலிக்கு 'கேல் ரத்னா'

## பி.சி.சி.ஐ., பரிந்துரை



மத்திய அரசின் உயரிய கேல் ரத்னா விருதுக்கு, இந்திய அணி அணித் தலைவர் ஹோலி பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

டிராவிட்டுக்கு துரோணாச்சார்யா, கவாஸ்கருக்கு தயான் சந்த் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

இந்திய மத்திய அரசு சார்பில் ஆணடுதோறும் கேல் ரத்னா விருது வழங்கப்படுகிறது. இது, விளையாட்டு அரங்கில் தரப்படும் உயர்ந்த விருதாக கருதப்படுகிறது. இம்முறை, இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராத் ஹோலி பெயர்பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, 2016ல் பரிந்துரை செய்யப்பட்ட போதும், ரியோ ஒலிம்பிக்கில் அசத்திய சிந்து, தீபா கர்மாகர் உள்ளிட்டோருக்கு இந்த விருது தரப்பட்டது. இம்முறை, ஹோலிக்கு தரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த பயிற்சியாளர்களுக்கு தரப்படும் துரோணாச்சார்யா விருதுக்கு, முன்னாள் அணித் தலைவர் டிராவிட் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

சமீபத்திய, 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிணணத் தொடரில் இவரது பயிற்சியில்தான், இந்திய அணி கிண்ணம் வென்றது. வாழ்நாள் சாதனையாளருக்கான, தயான் சந்த் விருதுக்கு முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் பரிந்துரைக்கப்பட்டார்.

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்

## ஐ.தே.க. அமைச்சர் கிரியெல்ல அழைப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைய்யை ஒழிக்க அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

மாலபே பிரதேசத்தில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அனைத்து கட்சிகளின் அரசியல் கொள்கையாக இருந்தது எனவும் இதனால், அதனை ஒழிக்க அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டியது அத்தியாவசியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி 20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரவுள்ளதாக அறிவித்துள்ளது. ஓரிடத்தில் அதிகாரம் குவிந்து கிடப்பதை தடுத்து அதனை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு பகிரும் வகையில் தாம் இந்த திருத்தச் சட்டத்தை கொண்டு வரவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
1934 - 02 - 12



விண்ணில்
2018 - 03 - 29

### இளையதம்பி ஐயாத்துரை (ஓய்வுநிலை அரச அதிபர்)

(சி-2409)

வடமராட்சி அந்தணந்திடலை பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வாழ்விடமாகவும் கொண்ட ஓய்வு நிலை அரச அதிபரான இளையதம்பி ஐயாத்துரை அவர்கள் 29.03.2018 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீத்தார். அமரர் ஐயாத்துரை அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 28.04.2018 நாளை சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் கரணவாய் தெற்கில் அமைந்துள்ள அவரது வீட்டில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவரின் இறுதிச் சடங்கு நிகழ்வில் கலந்து கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் தமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்திய உள்ளங்களுக்கும் தொலைபேசியூடாக உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருந்து துயர்பகிர்ந்த அன்பர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி உரைகளை வழங்கிய பெரியோர்களுக்கும் அன்னாரின் நினைவேட்டுக்கு ஆக்கங்கள் வழங்கிய பெரியோர்களுக்கும் போசன உதவிகள், சரீர உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். *இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

"இரஞ்சிதா", கரணவாய் தெற்கு, கரவெட்டி.
தொ.இல: 077 332 6008, 077 162 9972
இங்ஙனம், குடும்பத்தவர்கள்.

## பகிரங்க ஏல விற்பனை-2018
## பருத்தித்துறை பிரதேச சபை-புலோலி

பருத்தித்துறை பிரதேச சபை புலோலியிலும் குடத்தனை உப அலுவலகத்திலும் உள்ள பழைய கட்டுமானப் பொருட்களும் அலுவலக தளபாடங்கள், உபகரணங்களும் பகிரங்க ஏலத்தில் பின்வரும் திகதி, விபரப்படி விற்பனை செய்யப்படவுள்ளன. ஏல விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மேற்குறித்த அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் நாள் **மு.ப 9.00 மணி முதல் பி.ப 1.00 மணி வரை** பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனைப் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப் பணத்தினையும் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்று அன்றைய தினம் **மாலை 4.00 மணிக்கு** முன்னர் பொருட்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

ஏல விற்பனைத் திகதி 04.05.2018
வெள்ளிக்கிழமை மு.ப 9.30.மணி
இடம் :- குடத்தனை உப அலுவலகம்.

| | | |
|---|---|---|
| '1 | Dustbin large | 1` |
| 2 | Rake | 1 |
| 3 | Water pump T4L 344533 FMX | 1 |
| 4 | Chair Normal | 6 |
| 5 | Computer chair | 2 |
| 6 | CPU | 4 |
| 7 | Moniter | 2 |
| 8 | UPS | 4 |
| 9 | Key board | 3 |
| 10 | Plastic chair 2,1 | 3 |
| 11 | Wheel roll | 2 |
| 12 | Almirah steel file | 3 |
| 13 | Table plywood | 1 |
| 14 | Office table woden | 1 |
| 15 | Table steel | 1 |
| 16 | Almirah steel glass | 1 |

ஏல விற்பனைத் திகதி:04.05.2018
வெள்ளிக்கிழமை மு.ப 11.30.மணி
இடம் : வாகன தரிப்பிடம்.
ஆனைவிழுந்தான்
பருத்தித்துறை பிரதேச சபை

| | | |
|---|---|---|
| 17 | Chair arm | 3 |
| 18 | Hamer | 1 |
| 19 | Radiator | 10 |
| 20 | பழைய இரும்பு | - |
| 21 | பழைய பற்றரிகள் | 4 |
| 22 | நிலை | 07 |
| 23 | யன்னல் | 10 |
| 24 | கதவு | 14 |
| 25 | நிலை கதவு | 04 |
| 26 | யன்னல் நிலை | 33 |
| 27 | முட்டுத் தடிகள் | 500 |
| 28 | முட்டு பலகை | 500 |
| 29 | ஓடு | 1800 |
| 30 | முகட்டு ஓடு | 63 |
| 31 | தூலா ( மரம் ) | 12 |
| 32 | சல்லி கல் ( கருங்கல்) ¾" | 10.01 கியூப் |
| 33 | சீமெந்துக் கல் | 340 |

தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.

(சி-2412)

## இராசி பலன்

**மீனம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.

**மேடம்:** எடுத்த காரியத்தை எளிதில் நிறைவேற்றுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** வியாபார நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கடகம்:** முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மகரம்:** பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், ஒரு சில நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**இராசி பலன் — கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக் | |
| | | | ராகு |
| கேது | | | |
| செவ், சனி | | குரு | |

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

**27.04.2018**
சித்திரை 14,வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துவாதசி முற்பகல் 8.38 மணிவரை
உத்தரம் பிற்பகல் 2.26 மணிவரை
சுபநேரம் 5.59-7.29 மணிவரை
இராகுகாலம் 10.29-11.59 மணிவரை
பிரதோச விரதம், சித்தாமிர்தம்
வளவன்

**தனுசு:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

# த.தே.ம. முன்னணியின் மே தின எழுச்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியமக்கள் முன்னணிமற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிஸ் ஆகிய கட்சிகள் இணைந்து தொழிலாளர் தின எழுச்சி நிகழ்வை எதிர்வரும் முதலாம் திகதி நல்லூர் கிட்டுப் பூங்கா வளாகத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் அனைவரையும் அணி திரளுமாறு அறைகூவல் விடுக்கின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அறிவித்துள்ளார். (இ)




# நீரினை வீண்விரயம் செய்யாதீர்கள்!

## கடும் வரட்சியால் பெரும் தட்டுப்பாடு நீர் வழங்கல் சபை விசேட அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"தற்போது நிலவும் கடுமையான வரட்சி காரணமாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினரின் நீர் எடுக்கும் இடங்களில் பெரும் நீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் கரவெட்டி பாவனையாளர்கள் நீரினை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்வதோடு எதிர்பாராத விதமாக முன்னறிவித்தலின்றியோ அல்லது முன்னறிவித்தலுடன் நீர்விநியோகத் தடை ஏற்பட சாத்தியங்கள் காணப்படுகின்றது.

இருப்பினும் இருநாட்களுக்கு ஒரு தடவை (ஒரு நாள்விட்டு ஒரு நாளிற்கு) நீர் விநியோகத்தினை உறுதிப்படுத்த முடியும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் எந்திரி ஏ.ஜெகதீசன் அறிவித்துள்ளார். (இ)

# 13 வருடங்கள் உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் கீழ் மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

பதின்மூன்று வருட உத்தரவாத மளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் உயர்தரத் தொழில் பாடத்துறையினை க.பொ.த (உ/தர) இல் சகல பிள்ளைகளுக்கும் உறுதிப்படுத்த கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ் வேலைத் திட்டத்தினுள் இரண்டாம் கட் டமாக 137 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாண கோட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் நடைமுறைப்படுத்த தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் அறியத் தந்துள்ளார்.

க.பொ.த.(சா/த) பரீட்சையில் 2017 ஆம் ஆண்டிலும் 2016 ஆம் ஆண்டிலும் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சித்தியடைந்தமை மற்றும் சித்தியடையாமை குறித்து கவனத்திற் கொள்ளாது சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மூன்று முக்கிய பாடத்துறைகளை ஒரு மாணவன் கற்க வேண்டும். அவையாவன,

1.பொதுப்பாடத்துறை

2.பிரயோகப் பாடத்துறை

3.நிறுவனஞ்சார் தொழிற் பயிற்சி

தரம் 12 இல் பொதுப்பாடத்துறையும் பிரயோகப் பாடத்துறையும் கற்பிக்கப்படும். முதலாவதுதவணையில்பொதுப் பாடத்துறையில் அடங்கும் ஒன்பது பாடங்களையும் இரண்டாம். மூன்றாம் தவணைக்ளில் பிரயோகப்பாடத்துறையில் அடங்கும் 26 பாடங்களில் விரும்பிய மூன்று பாடங்களையும் தெரிவு செய்து கற்க வேண்டும்.

தரம் 13 இல் மேலே கற்ற மூன்றில் ஒருபாடத்தை தெரிவு செய்து கற்பதுடன் தொழிற்பயிற்சிக்காக கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கற்றல் பயிற்சியினை மேற்கொள்ளல் வேண்டும்.

இவ்வயனைத்தும் பாடசாலை நேரத்தினுள் வழமையான பாடவேளைகள் (40 நிமிடம்) போலல்லாது, நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக அமையும்.

எனவே மேலே குறித்த வகுதியைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலை நேரத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து அதனை 04.05.2018 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு வேண்டுகின்றோம்.

மேலதிக விபரங்களை அதிபர் அலுவலகத்தில் பெறலாம்.

குறிப்பு:- 10.05.2018 வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன என அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் அறிவித்துள்ளார்.(இ)

# ஊனமுற்றோர் என்ற சொல்லை உபயோகப்படுத்த வேண்டாம்


## வடக்கு முதலமைச்சர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சேவ் ஏ லைவ் (Save a life) என்னும் நிறுவனத்தைச் சேர்ந்த ராகுலன் கந்தசாமி என்பவர் முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்தித்து தற்போது வடமாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள், பேருந்துகள், பொது இடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகிய அனைத்திலும் ஊனமுற்றவர்கள் (Disabled) என்ற பதமே பாவிக்கப்படுவதாகவும் இது அவர்களுடைய மனநிலையைப் பாதிப்பதாகவும் முறையிட்டுள்ளார்.

மாற்றுத்திறனாளிகளைக் குறிப்பதற்கு ஊனமுற்றவர்கள் என்ற பதம் பாவிக்கப்படுதல் பொருத்தமற்றது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் நடைமுறையில் இந்த வார்த்தைப் பிரயோகம் பரவலாகப் பாவிக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் ஊனமுற்றவர்கள் என்ற பதத்திற்குப் பதிலாக மாற்றுத்திறனாளிகள் (Differently Abled) என்ற சொற்பதத்தை சகஜமான முறையில் பாவனைகுட்படுத்துவதற்கு ஏற்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கியமானதாகத் தோன்றுகின்றது.

எனவே இவ்விடயத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்தி ஆழமாக ஆராய்ந்து வடமாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள், பேருந்துகள், பொது இடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகிய அனைத்திலும் மாற்றுத்திறனாளிகள் (Differently Abled) என்ற சொற்பதப் பாவனையைக் காட்சிப்படுத்துவதற்கும் அரசஆவணங்களில்இச் சொற்பிரயோகத்தைப் பாவிப்பதற்கும் உரிய ஏற்பாடுகளை சுற்றறிக்கைகள் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்பாடுகள் மூலமாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளும் படி முதலமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என வடமாகாண முதலமைச்சரின் அமைச்சு செயலாளர் வி.கேதீஸ்வரன், சமூக சேவைகள் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியுள்ளார். (இ-7)




இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலி.மேற்கு பிரிவும் சித்தன்கேணி இந்து இளைஞர் சனசமூக நிலைய அங்கத்தவர்களும் இணைந்து நடத்திய இரத்ததான நிகழ்வு அண்மையில் சித்தன்கேணி இந்து இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. (படங்கள்: மயில்வாகனம்)

# கிராமத்தின் அபிவிருத்தி மக்களில் தங்கியுள்ளது

## அரச அதிபர் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

அபிவிருத்தியில் எந்தக் கிராமத்தவர்கள் முன்னின்று செயற்படுகிறார்களோ அந்தக் கிராமம் முன்னேற்றமடையும் என யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

சமரபாகு ஆரம்ப சுகாதார நிலையத்திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நியூட்டன் சனசமூக நிலையத் லைவர் வெள்ளி மலை தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்திப் பணிகளில் எந்த கிராமத்தவர்கள் முன்னின்று செயற்படுகிறார்களோ அந்தக் கிராமம் முன்னேற்றம் காணும். அந்தவகையிலே தான் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நீங்கள் காணி வழங்கியதன் மூலமே இச் சுகாதார நிலையம் அமைக்கப்பட்டது. தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் இருந்தே இக் கட்டடம் அமைக்கப்பட்டது. இதற்கு மதில் அமைத்துத் தருமாறு நீங்கள் கோரியுள்ளீர்கள். உங்கள் கோரிக்கைக்கு அமைவாக விரைவில்மதில்அமைத்துத்தருவதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் விளம்பரப் பலகைகளை அகற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்கள் விற்பனைப்பொருட்களையும் விளம்பரப்பலகைகளையும் பொது மக்கள் நடந்து செல்லும் பாதைகளில் வைத்துள்ளதால் மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்குவதாக யாழ்.மாவட்ட போக்குவரத்து பொலிஸார் யாழ்.வணிகர் கழகத்திற்கு அறிவித்துள்ளதுடன் அவற்றினை அகற்றி மக்களின் சிரமங்களை நீக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளிலிருந்து தவறும் வர்த்தகர்களின் பொருட்கள் மற்றும் விளம்பரப்பலகைகள் பொலிஸ்நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர். எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கூடிய கவனம் எடுத்து தங்கள் விற்பனைப் பொருட்களையும் விளம்பரப் பலகைகளையும் அகற்றி ஒத்துழைப்பு வழங்கும்படி யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ)

# சித்திராப் பௌர்ணமி பூஜை

(யாழ்ப்பாணம்)

வேதாந்தமடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமம் நடத்தும் சித்திரா பௌர்ணமி பூசை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசாமி வீதியில் இடம்பெறும். (இ)

# கடவுள் சுவாமிகளின் 113வது ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 113 ஆவது ஜெயந்தி தின விழா நாளை சனிக்கிழமை காலை 8 மணியளவில் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் முற்பகல் 10 மணியளவில் விசாகரத்தின ஐயா மடத்தில் ஜனன பூசையும் சொற்பொழிவுகளும் இடம் பெற்று சந்நிதியான் ஆச்சிரம த்தில் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (இ)

# மே-1 தொழிலாளர்களை ஒன்றிணைய வடமாகாண அழகக சங்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மே-01 உலகத் தொழிலாளர் தினத்தில் எமது வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் தொழிலாளர் தினத்தை வழமை போல் கடைப்பிடிக்கவுள்ளது.

அன்றைய தினம் எமது தொழிலாளர்களுக்கு விடுமுறை தினமாகும்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி , யாழ்ப்பாணம் ஒன்றிணைந்த சம்மேளனத்தின் மேதினக் கூட்டத்தில் அனைத்து அழகக சங்க தொழிலாளர்களையும் ஒன்றிணையுமாறு வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது. (இ-60)

# மாகாண மட்ட மனிதவுரிமைகள் புதிர்ப்போட்டியில் மகாஜனக் கல்லூரி தேசிய மட்டத்திற்குத் தெரிவு





(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரி மைகள் ஆணைக் குழுவி னால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மனித உரிமைகள் அறிவை விருத்தி செய்யும் முகமாகவும் பாடசாலை மட்டத்திலிருந்தே மனித உரிமை கலாசா ரத்தை உரு வாக்கும் முகமாகவும் நடத் தப்பட்ட மனித உரிமைகள் புதிர்ப்போட்டி யின் மாகாண மட்ட போட்டி கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சி வலயக் கல்வி அலுவ லகத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் வலய மட்ட போட்டியில்முத லாம்இடத்தை பெற்று பின் மாவட்ட மட்ட போட்டி களில் முதல் இடங்களை பெற்ற 02 அணிகள் மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவாகின. இம் மாகாண மட்ட போட்டியில் வட மாகாணத் திலுள்ள 05 மாவட்டங்களையும் சேர்ந்த 10 பாடசாலை அணிகள் பங்குபற்றின.

இம்மாகாண மட்ட போட் டியில் யாழ்.மகா ஜனக் கல் லூரி முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்திற்கு வட மாகாண அணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் இடத்தினை யாழ்.வல்வை சிவகுரு வித் தியாசாலையும் மூன்றாம் இடத்தினை வவுனியா சைவ ப்பிரகாச மகளிர் கல்லூரி யும் பெற்றுக்கொண்டன. (இ-9)

# சாரணிய பவள விழா மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். கொக்குவில் இந் துக் கல்லூரியின் சாரணிய பவள விழா மலருக்கான கட்டுரைகளையும் சாரணி யம் சார்ந்த செய்திகளையும் புகைப்படத் தொகுப்புக்களை யும் வைகாசி மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக் குமாறு கல்லூரியின் பழைய மாணவர்களுக்கு கல்லூரி அதிபர் ஞானசம்பந்தன் அறி வித்துள்ளார். (இ-7)

# கட்டடத் திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இராமநாதன் கல்லூரி ஆரம்பப் பிரிவு கட்டடத் திறப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபி ள்ளை தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தின ராக யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் தர்மலிங் கம் சித்தார்த்தன், சிறப்பு விரு ந்தினராக வலிகாமம் வல யக் கல்விப் பணிப்பாளர் செல் வரட்ணம் சந்திரராஜா ஆகி யோர் கலந்து கொள்வர். (இ-7)


## இணுவில் திருப்பதி அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய வருடாந்த வசந்தோற்சவமும் இயற்கை மூலிகை அபிஷேகமும்-2018

27.04.2018 முதல் 30.04.2018 வரை

கோவிந்தன் அடியார்களே!

"நாட்டின் காலநிலை சீர் வேண்டி எம்பெருமானால் படைக்கப்பட்ட பயன் தரும் இயற்கை மூலிகைகளைக் கொண்டு இறைவனுக்கு அபிஷேகம் செய்து பயன் பெறும் நாட்கள்"



மேற்படி காலங்களில் தினமும் காலை 9.00 மணி முதலும் மாலை 4.00 மணி முதலும் மேற்படி அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

**29.04.2018 ஞாயிறு வசந்தோற்சவ பூர்த்தி**

காலை 8.00 மணி முதல் 81 கலச மகா அபிஷேகம்
மாலை 5.00 மணி முதல் மகாயாகம், பூர்ணாகுதி
இரவு 7.30 மணிக்கு பிரதான கலச சகிதம் நாராயணப் பெருமான் வீதி உலா தொடர்ந்து கும்பபுரோட்சணம், ஆசீர்வாதம்

**30.04.2018 (திங்கள்) மாலை 5.00 மணிக்கு**

லக்சுமி நாராயணர் திருக்கல்யாணம்.

**கலை நிகழ்ச்சி**

**27.04.2018 வெள்ளி இன்று மாலை 6.00 மணிக்கு இசை அரங்கம்:**
பாட்டு: திரு.க.ரஜீவன் வயலின்: திரு.ப.சியாம் கிருஷ்ணா
மிருதங்கம்: திரு.சி.செந்தூரன் கெஞ்சிரா: திரு.அ.சண்முகப்பிரியன்
முகர்சிங்: திரு.நி.மோகனதாசன்

**28.04.2018 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வயலின் இசை**
வயலின்: திரு.ப.சியாம்கிருஷ்ணா மிருதங்கம்: திரு.நா.சிவசுந்தரசர்மா
முகர்சிங்: திரு.சி.செந்தூரன் கடம்: திரு. கு.ரவிசங்கர்.

29.04.2018 ஞாயிறு மாலை 6.30 மணிக்கு இணுவையூர் குமர நர்தனாலய மாணவர்கள் அளிக்கும் **கிருஷ்ணாஞ்சலி** தயாரித்து வழங்குபவர்

நாட்டிய கலைமணி திருவாளர் நடராஜா குமரவேள்
(நடன ஆசிரியர், யா/ யூனியன் கல்லூரி)

**021 224 2300** (3761) **ஆலய தர்மகர்த்தா ச.கணேசலிங்கம்.**



## பூசகர் தேவை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் மாணிக் கப்பிள்ளையார் ஆலயத்திற்கு பிராமணகுலபூசகர் தேவை. ஐயாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள கோயில் வீட்டில் தங்கியிருந்து பூசை செய்யக் கூடிய வராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித்தீர்மானித்துக் கொள்ளலாம்.

விரும்புவோர் தமது சுய விபரங்களுடன் 15.05.2018 இற்கு முன்பு தலைவர்/ செயலாளர் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் உருத்திரபுரம் என்னும் முகவரியுடனோ/077 733 8153 , 077 722 1960 இலக்க தொலைபேசியுடனோ தொடர்பு கொள்ளலாம்.

ஆலய பரிபாலன சபை,
மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், உருத்திரபுரம்.

(சி-2408)


## சிறந்த நூல் பரிசுப் போட்டி, அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி மற்றும் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற சிறந்த நூல் பரிசுப் போட்டி, அரச ஊழி யர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி மற்றும் பதிவு செய் யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந் தன. அவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 04.05.2018 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுடையவர்கள் விண்ணப்பப் படிவங்களை 04.05.2018ற்கு முன் கிடைக்கக் கூடியவாறு பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக் களம், செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக தகவலுக்கு 021 205 4105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும்.

(சி/2410)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 24 சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc/ பொறியியலாளர்
தொ.இ: B/7623

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
செவ் 7 இல்
தகைமை/தொழில்: பொறியியலாளர் லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/7624

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 165cm
தகைமை/தொழில்: A/L
தொ.இ: B/7627

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 41
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BCA
தொ.இ: B/7630

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc/ விரிவுரையாளர்
தொ.இ: G/7681

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 52 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HNDA, BSc
தொ.இ: G/7684

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 38
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: பல் வைத்தியர்
தொ.இ: G/7686

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:28
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்
தொ.இ: G/7689

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சிறுபோகத்தில் வரட்சியை வெல்ல விழிப்புணர்வு கருத்தரங்கு



(வவுனியா)

விவசாய ஊக்குவிப்பு விசேட செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண வாரத்தை முன்னிட்டு "ஒன்றாய் எழுவோம். சிறு போகத்தை வெல்வோம்" எனும் தொனிப் பொருளில் மாவட்ட நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி காலை 9 மணியளவில் சிறுபோகத்தில் வரட்சியை வெல்வதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு வவுனியா மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி எஸ்.ஜே.அரசகேசரி, வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், தேசிய வழங்கல் முகாமைத்துவ நிலையத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் கலாநிதி நிஜாமுதீன், வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (SPM) ப.சத்தியமூர்த்தி, வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி ல.பிருந்தாவ ஈஸ்வரன், இலங்கை விவசாயக் கல்லூரியின் வவுனியா அதிபர் திருமதி.கு.சந்திரகாந்தன், வவுனியா பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ந.நவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் நுண் நீர்ப்பாசனத்தின் பராமரிப்பு பற்றிய கருத்தரங்கை கலாநிதி நிஜாமுதீன் நடத்தினார்.

இந்நிகழ்வில் வலு தூவல் நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனத்தின்கீழ் நிலக்கடலைச் செய்கை.பொசிவு நீர்ப்பாசனத்தின்கீழ் தேசி, தோடைச் செய்கை, பீப்பாய் முறைப் பயிர்ச்செய்கை, துளி நீர்ப்பாசனத்தின்கீழ் பப்பாசிச் செய்கை, துளி நீர்ப்பாசனத்தின்கீழ் வாழைச் செய்கை, துளி நீர்ப்பாசனத்தின்கீழ் அன்னாசிச் செய்கை, வீதிமுறைப்பயிர்ச் செய்கை, பாதுகாப்பு கூடாரத்தின் கீழ் பயிர்ச்செய்கை, உயிர்க்கரி மற்றும் பகுதிகருக்கிய உமி தயாரிப்பு மற்றும் பிரயோகம் ஆகிய தொழில்நுட்பங்கள் காண்பிக்கப்பட்டன.

பிரதி விவசாயப் பணிப்பாளரினால் விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அலுவலக உத்தியோகத்தர்களால் விற்பனை செய்பட்டன.

திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் அடங்கலாக 200 பேர் கலந்து கொண்டிருந்தனர். (2)

# முல்லை.மாவட்டத்தில் மலேரியா நுளம்பு உருவாகும் சாத்தியம் அதிகம்

## நுளம்பைத் தடுக்க அனைவரும் அவதானத்துடன் செயற்படுங்கள் மலேரியா தடை இயக்க பொறுப்பு வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

**இலங்கையில் மலேரியா நுளம்பு முற்றாக அழிக்கப்பட்டு விட்டாலும் அது முல்லைத்தீவு மாவட்டத்தில் உருவாகும் சாத்தியக் கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன. ஆதலால் மலேரியா நுளம்பைத் தடுக்க அனைவரும் செயற்படுங்கள் என முல்லைத்தீவு மாவட்ட மலேரியா தடை இயக்க பொறுப்பு வைத்திய அதிகாரி வி.விஜிதரன் தெரிவித்துள்ளார்.**



உலக மலேரியா தினத்தையொட்டி முல்லைத்தீவு மாவட்ட மலேரியா தடை இயக்கப் பொறுப்பு வைத்திய அதிகாரி வி.விஜிதரன் நேற்று ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரத் திணைக்கள பணிமனை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஊடக சந்திப்பை மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனை பொறுப்பதிகாரி ரி.பூங்கோதை மற்றும் மாவட்ட மலேரியா தடை இயக்க பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோர் நடத்தினர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் மலேரியா நுளம்பு முற்றாக அழிக்கப்பட்டு விட்டாலும் அது முல்லைத்தீவு மாவட்டத்தில் உருவாகும் சாத்தியக்கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

குறிப்பாக இலங்கையில் மலேரியா நோய் வெளிநாடுகளுக்குச் சென்று வருபவர்கள் மூலம் தான் பரப்பப்படுகின்றது. குறிப்பாக இந்தியாவிற்கு சென்று வருபவர்கள் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றார்கள்.

இப்பொழுது இலங்கையின் நிலவரப்படி ஆறு ஆண்டுகளாக உள்ளக மலேரியா இல்லை. மலேரியா வரக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இங்கு நுளம்பு அதிகம் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இயற்கை அமைப்பில் நிறையக் குளங்கள், ஆறுகள், நீர் ஓடைகள் அனோபிளிஸ் நுளம்பு பெருகக்கூடிய இடங்களாக இவை கணிக்கப்படுகின்றன. இந்த நோயை உருவாக்குகின்ற கிருமி மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு மலேரியா நோயாளி முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் பகுதியில் மட்டுமே இனம் காணப்பட்டுள்ளது.

மலேரியா நோய்தாக்கம் மக்கள் மத்தியில் காணப்பட்ட காலப்பகுதியில் மக்கள் விழிப்புணர்வுடன் இருந்தார்கள். அதனால் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்துள்ளது.

இப்போது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு குறைந்து கொண்டு செல்கின்றது. இந்நிலையில் ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இந்தியாவிற்கு சென்று வரும் மக்களின் அளவு அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலையில் சென்று கூறினால் அதற்குரிய தடுப்பு மருந்து எடுத்துக்கொள்ளலாம். மக்கள் நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்குச் செல்வதாக இருந்தால் தடுப்பு மருந்தை எடுக்கவேண்டும். இதன் ஊடாக நோய்த்தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

முன் பொருகாலத்தில் நடுக்கத்துடன்தான் மலேரியா காய்ச்சல் வரும். இப்போது நடுக்கம் இல்லாமல் சாதாரண காய்ச்சலுடன் மலேரியா வருகின்றது. இவ்வாறான நிலையில் இருப்பவர்கள் தாங்கள் மாதம் ஒருதடவை குருதியை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். எனவே வெளிநாடுகளில் இருந்து வருபவர்களும் வெளிநாட்டிற்குச் சென்று வருபவர்களும் கண்டிப்பாக மருத்து பரிசோதனையை செய்யுங்கள். இதன் ஊடாக மாவட்டங்களில் இருக்கும் மக்களையும் நோய்த்தாக்கத்தில் இருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும் என்றும் மாவட்ட மலேரியா தடை இயக்கப் பொறுப்பு வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (2-281)

# இரணை தீவில் மக்களை சந்தித்தனர் சமத்துவம் சமூகநீதிக்கான அமைப்பினர்



(பரந்தன்)

தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி இரணைமாதா நகரில் 359 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் இரணைதீவிற்குச் சென்று கடந்த 23 ஆம் திகதியில் இருந்து தமது போராட்டத்தை தொடர்கின்றனர்.

இந் நிலையில் நேற்று 362 ஆவது நாளாக இரணைதீவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான சமத்துவம் சமூகநீதிக்கான அமைப்பினர் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அவர்களுக்கு தேவையான சிறுதொகை உலருணவுப் பொதிகளையும் வழங்கியுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் இது வரை தம்மை அரச அதிகாரிகள் யாரும் தொடர்பு கொள்ளவில்லை.

தொடர்ந்தும் தாம் ஏமாற்றப்படும் பட்சத்தில் தமது இருப்பிடங்களுக்கு தாங்களாகச் செல்வதனைத் தவிர வேறு வழிகள் எதுவும் இல்லை எனத் தெரிவித்தனர். (2-312)

# மோ.சைக்கிள் - கன்டர் வாகனம் விபத்து; தாயும் மகளும் படுகாயம்

(பனிக்கன்குளம்)

வவுனியா சூசைப் பிள்ளையார்குளம் சந்தியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

சூசைப் பிள்ளையார் குளம் சந்தியில் கந்தசுவாமி கோவில் வீதியிலிருந்து தனது மகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற போது சூசைப் பிள்ளையார் குளம் வீதி வழியாகச் சென்ற மரக்கறி வகைகளை ஏற்றிப் பயணித்த கன்டர் ரக வாகனத்துடன் சந்தியில் மோதியுள்ளது.

இதன்போது வவு/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவியும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற தாயும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் விபத்துப்பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் விரைந்த பொலிஸார் மரக்கறி வாகனத்தையும் சாரதியையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# உயிரிழந்த குடும்பஸ்தர் அடையாளம் காணப்பட்டார்

(பூநகரி)

பூநகரி- கிளிநொச்சி வீதியில் நல்லூர் கிராமத்தில் கனரக வாகனம்- மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த் நபர் அடையாளம் காணப்படாத நிலையில் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

இவ்விபத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த வில்பேட் ஜெராட் கொன்சன் (வயது-37) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராக உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் மனைவியிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. கனரக வாகன சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (2-84)





# பூநகரி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் , பூநகரி பிரதேச பொறுப்பதிகாரி , 66 ஆவது படைப்பிரிவின் உயர் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-84)



தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்ற மதங்களுக்கிடையிலும் கலாசாரங்களுக்கிடையிலுமான விழாக்களைக் கூட்டாகக் கொண்டாடுதல் எனும் தொனிப் பொருளில் முல்லைத்தீவு மாவட்ட சித்திரைப் புத்தாண்டு விழா கடந்த 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது.....

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## மேய்ச்சல் தரவை வழங்கப்படாவிடின்

# கால்நடைகளுடன் வீதியில் இறங்கி போராடுவோம்

## எச்சரிக்கின்றனர் கால்நடை வளர்ப்போர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளை வளர்ப்பதற்கு மேய்ச்சல் தரவை பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் கால்நடைகளுக்கு மேல் இருக்கின்ற போதும் மேய்ச்சல் தரவை இல்லாதது பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

மேய்ச்சல் தரவை இல்லாது போனால் கால்நடைகளுடன் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தமது கால்நடைகளை அழிக்க வேண்டி வரும் என்றும் கால்நடை வளர்ப்போர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கால்நடை பண்ணையாளர், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மட்டும் எட்டாயிரம் மாடுகள் வரையிலும் மாவட்டத்தை பொறுத்தமட்டில் 15 ஆயிரம் மாட்டிற்கு மேலும் காணப்படுகின்றன.

அவற்றை வைத்து பராமரிக்க மேய்ச்சல் தரவை இல்லாத நிலை காணப்படுகின்றது. பிரதேச செயலகத்திற்கு சென்று கதைத்தாலும் அவர்கள் வனவள பாதுகாப்பு பிரிவினரை அழைத்து கதைக்கின்றார்கள். அவர்கள் அதற்கு அனுமதி இல்லை என்று சொல்கின்றார்கள். இவ்வாறான நிலையில் மேய்ச்சல் தரவை இல்லாத நிலையில் கால்நடைகளை நாங்கள் அழிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்றார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட கால்நடை சங்க தலைவர் கருத்து தெரிவிக்கையில், புதுக்குடியிருப்பிற்கு அருகில் உள்ள எழுவாய் என்ற இடத்தில் மேய்ச்சல் தரவை அமைத்து தருவதாக கூறினார்கள். ஆனால் இது வரை அது செய்து தரப்படவில்லை. மாடுகளை மேய்ப்பதற்கு மேய்ச்சல் தரவை ஒன்று கட்டாய தேவையாக உள்ளது.

ஆதலால் மாடுகளை கொண்டு நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அடுத்தகட்டம் அதனை மேற்கொள்வோம் எங்களுக்கான மேய்ச்சல் தரவையினை விரைவில் அடையாளப்படுத்தி இடத்தினை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (2-281)

## முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு விரைவில் புதிய கதிர்பட இயந்திரம் கொள்வனவு

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கதிர்படம் எடுக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளமையினால் நோயாளர்களின் சிரமம் முடிவிற்கு கொண்டுவரப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களாக கதிர்படம் எடுக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளமையினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் பாரிய எலும்பு முறிவுக்குட்பட்ட நோயாளர்கள் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பியே கதிர்படம் எடுக்கப்படுகின்றன. இந்நிலையில் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

வைத்தியசாலையின் இந்த குறைபாடு தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலனைத் தொடர்பு கொண்டு வினவிய போது, கதிர்படம் எடுக்கப்படும் சிறிய இயந்திரம் வைத்தியசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் கதிர்படம் எடுக்கும் நடவடிக்கை நிரந்தரமானது அல்ல. வைத்தியசாலை நிர்வாகத்தினால் மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக 6.5 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கான முழு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டு வாரங்களில் இயந்திரம் கொள்வனவு செய்யப்படும். அதன் பின்னர் இயந்திரத்தினுடைய நிறுவனம் இயந்திரத்தினை கொண்டுவந்து பொருத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதன் பின்னர் புதிய இயந்திரம் மாவட்ட வைத்தியசாலையில் இயங்க தொடங்கிய பின்னர் நோயாளர்களின் பிரச்சினை முடிவிற்கு கொண்டுவரப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-281)




## சூரியகல நீர் இறைக்கும் இயந்திரப்பாவனையும் வலுத்தூவல் நீர்ப்பாசன பாவனை அறிமுகமும்





(வவுனியா)

விவசாய ஊக்குவிப்பு விசேட செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண வாரத்தினை முன்னிட்டு "ஒன்றாய் எழுவோம் சிறுபோகத்தை வெல்வோம்" எனும் தொனிப்பொருளில் முதல் நிகழ்வாக சூழல் நேய பேண்தகு விவசாய விரிவாக்க கோட்பாட்டின் அடிப்படையில் மீள்பாவனை சக்தி வளமான சூரிய சக்தியை பயன்படுத்தி சூரியகலநீர் இறைக்கும் இயந்திரபாவனையும் காலநிலை மாறுபாட்டினை வெற்றி கொள்ளும் வகையில் சூரியசக்தியை பயன்படுத்தி வலுத்தூவல் நீர்ப்பாசன பாவனையை அறிமுகப்படுத்தும் விவசாய ஊக்குவிப்பு செயற்றிட்டம் பம்பைமடு விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள பூவரசங்குளம் கிராமத்தில் கடந்த 23ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தலைமை தாங்கிய பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் சூழல்நேய பேண்தகு விவசாய அபிவிருத்தியின் நோக்கம், முக்கியத்துவம் தேவைப்பாடு, மீள்பாவனை சக்தியின் உச்சப்பாவனை ஆகியவை பற்றியும் இன்றைய காலத்தின் காலநிலை மாறுபாட்டினை எதிர்கொள்ள வேண்டிய தேவைப்பாடு பற்றியும் எடுத்துரைத்தார்.

திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் அடங்கலாக சுமார் 125 பேர் கலந்து கொண்டனர். ஜனாதிபதி செயலகத்தின் நிதிப்பீட்டத்தின் கீழ் சூரிய கலநீர் இறைக்கும் இயந்திரம் அரை மானியத்தில் (ரூபாய் 168,250) வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## குடிநீர் விநியோகிப்பதற்கு நீர், வளங்கள் பற்றாக்குறை

## பூநகரி பிரதேச சபை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் மக்களுக்கான குடிநீரை வழங்குவதற்கு போதிய வளங்கள் இல்லாதிருப்பதுடன், குடி நீரைப் பெறுகின்ற இடங்களில் நீர்ப் பற்றாக்குறை காணப்படுவதாகவும் பூநகரிப் பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பூநகரிப் பிரதேசத்தில் பல்வேறு இடங்களிலும் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பூநகரி பிரதேசத்தில் சுமார் 11 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் வருடம் முழுவதும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் தேவை ஏற்படுகின்றது.

குடிநீர்த்தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பூநகரிப்பிரதேச சபையிடம் வினவிய போது, பிரதேச சபையினால் ஏற்கனவே குடிநீர் விநியோகிக்கின்ற பகுதிகளுக்கு தொடர்ச்சியாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மக்கள் கோரிக்கை விடுகின்ற பகுதிகளுக்கு மேலதிக சேவைகளை வழங்குவதற்கு பிரதேசசபையிடம் போதிய வளங்கள் இன்றிக் காணப்படுகின்றது.

இதனைவிட தண்ணீரைப் பெற்றுக்கொள்கின்ற தெளிகரை போன்ற இடங்களில் போதியளவு தண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. குடிநீர் விநியோகம் மேற்கொள்வதில் சிரமங்கள் காணப்படுவதாக பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## வவுனியாவை முன்மாதிரியான நகரமாக மாற்றுவதற்கு அனைவரும் கைகோருங்கள்

## நகர சபை தலைவர் அழைப்பு



(குருமன்காடு)

வவுனியா நகரத்தை முன்மாதிரியான நகரமாக மாற்றுவதற்கு முதல் கட்டமாக போதை மற்றும் புகையிலை பொருட்கள் அற்ற பிரதேசமாக மாற்ற அனைவரும் கைகோர்த்து உதவ வேண்டும் என வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் சங்கத்தின் செயலாளர் சோ. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நகர சபை மற்றும் பிரதேசசபை தலைவர், உப தலைவர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா நகர்ப்பகுதியில் பொழுதைக் களிக்கும் இடங்கள் இல்லாமையினால் இளைஞர்கள் புகையிலை பொருட்களின் பாவனை, மது பாவனை ஆகியவற்றிற்கு அடிமையாகி வருகின்றனர்.

எனவே இளைஞர்களை நல்வழிப்படுத்த வவுனியா நகரத்தை முன்மாதிரியான நகரமாக கொண்டு அனைவரும் ஒத்துழைப்பு நல்கும்படி புகையிலை பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

சட்ட ரீதியாக அதனை தடுப்பது கடினமான விடயம். எனவே நகரின் அபிவிருத்தி இளைஞர்களின் எதிர்காலம் கருதி இவ்வாறான பொருட்களை விற்பனை செய்பவர்கள் அதனை குறைத்துக் கொள்ளவோ, நிறுத்தவோ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு எமது பிரதேச மக்கள் ஓரணியாக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். (2-250)

## சிராட்டிக் குளத்தில் காடு அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக மரங்கள் கடத்தல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் பகுதியில் நடைபெற்று வரும் சட்டவிரோத காடழிப்புக்களை தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிராட்டிகுளம் கிராம அபிவிருத்தி சங்கம் கோரியுள்ளது

மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த காட்டு மரங்கள் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

தற்போது கடும் வறட்சி நிலவி வருகின்ற அதே நேரம் விவசாய கிராமமாக காணப்பட்ட கிராமம் இன்று பாலைவனங்கள் போல் மாறி வருகின்றது.

எமது கிராமத்தை அண்மித்த காட்டுப்பகுதிகளில் தினமும் பெறுமதியான மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறான காடுகள் அழிக்கப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர். (2-281)









தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவு நாள் நிகழ்வு யாழில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நேற்று இடம் பெற்றது.தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் மாலை அணிவித்தும் அவரின் சமாதிக்கு மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்வில் நினைவுப் பேருரையை நம சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன ஆற்றினார்.தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவர் பேராயர் கலாநிதி.எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் உலகத்தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ். ஜே.இமானுவேல், நல்லூர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன்,தந்தை செல்வாவின் மகன் சந்திரஹாசன், தமிழ்த்தேசியகூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ சுமந்திரன், யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் ஆகியோர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (படங்கள்-உ.சாளின்)

# இலங்கையில் இனவாதத்தை ஒழிக்க பிரித்தானியா தலையிட வேண்டும்

## அமைச்சர் றிசாத் கோரிக்கை



(கொழும்பு)

கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் முஸ்லிம்கள் மீது இடம்பெற்ற வன்முறைகள் உள்ளூர் ஏஜெண்டுகளினால் கூலிக்கு அமர்த்தப்பட்ட குண்டர்களைக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஒன்று என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்திலும் முஸ்லிம்கள் மீது அட்டூழியங்கள் நடத்தப்பட்டன. அதே போன்று, இந்த அரசாங்கத்திலும் அவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்படவில்லை. கண்டிச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரோ, பாதுகாப்புப் படையினரோ உரிய வேளையில் ஏற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.

நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களின் பாதுகாப்பு தொடர்பில், பிரித்தானிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டு வருகின்ற இனவாத சம்பவங்களைத் தொடர அனுமதிக்க வேண்டாமென்று இலங்கை அரசாங்கத்துக்கு பிரித்தானியா எடுத்துரைத்து, இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் நீல் கவனாஹ் ஒபேயுடன் நேற்று முன்தினம் கைத்தொழில், வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)




யாழ். இந்தியத் துணைத் தூதுவர் எஸ். பாலச்சந்திரன், யாழ்ப்பாணம் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார். இதன் போது பள்ளிவாசலின் நிர்வாகத் தலைவர் மெக்ஸா முபீன் வரவேற்றதுடன் எம் எஸ்.முஹம்மத்மௌலவியிடம்எஸ்.பாலச்சந்திரன் ஆசியையும் பெற்றுக்கொண்டார். இந் நிகழ்வில் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான கே.எம்.நிலாம், எம்.எம் நிபாஹீர், முன்னாள் மாநகர சபை உறுப்பினரான சரபுல் அனாம், கலாபூஷணம் எம்.எல்.லாபீர், சமாதான நீதவான் இக்பால் ஆகியோர் இணைந்து பாலச்சந்திரனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# புத்தாண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் கொட்டடி சனசமூக நிலையமும்இணைந்து நடத்தும் 2018 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டு விழா எதிர்வரும் 02.06.2018 நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி, மரதன் ஓட்டப்போட்டி என்பன இடம்பெறும். ஆண்,பெண் இருபாலாரும் இதில் பங்குபற்றலாம். ஜே/83 பிரிவில் சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள், உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள், தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் மற்றும் சமூக மட்டத்தில் சேவையாற்றி மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற சேவையாளர்களுக்கான சமூகத் திலகம் விருது வழங்கும் நிகழ்வு மற்றும் பொது அறிவுப் போட்டி, முட்டி உடைத்தல், கிடுகு பின்னல், மாலை கட்டுதல் என்பன நடைபெறவுள்ளன.

இதில் கலந்து கொள்ள விரும்புவர்கள் இம்மாத முடிவுக்குள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு நிலைய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

விண்ணப்பங்கள் யாவும் 05.05.2018 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி செயலாளர், சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் T:P: 077 614 6253 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மாட்டிறைச்சிக்கடை உரிமத்தை நீக்கக்கோரி மகஜர் கையளிப்பு



(சாவகச்சேரி)

மாட்டிறைச்சி விற்பனைக் கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்துச் செய்யுமாறு சாவகச்சேரி நகர சபையிடம் சிவசேனை அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சிவசேனை அமைப்பின் பிரதிநிதி மறவன்புலவு க.சச்சிதானந்தம் நேற்று முன்தினம் நகர சபைத் தவிசாளரிடம் கையளித்த மகஜர் ஊடாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சிவசேனை அமைப்பின் பிரதிநிதி சச்சிதானந்தன் வழங்கியுள்ள மகஜரில்,

அமைதி வாழ்வாக - அறமே கொள்கையாக வாழும் சைவ சமய இளைஞர்கள், யுவதிகள் கொதித்துக் கோபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பசுக்களையும் எருதுகளையும் பாதுகாத்தல், பேணுதல், பயன்படுத்தல் என்பன 5,000 ஆண்டு கால இலங்கை மண்ணின் மரபு.

இலங்கையின் பூர்வக் குடிகள் மாடுகளைத் தெய்வங்களாகப் பேணினர். மாட்டைக் கொல்லார், கருணைக் கும் கொல்லார். மாட்டிறைச்சி உண்ணார் உண்பது பாவம் என்பர், இதுவே இந்த மண்ணின் மரபு.

இந்த மண்ணின் மரபுக்குப் புறம்பாகச் சாவகச்சேரி நகர சபை மாட்டிறைச்சிக் கடைக்கு உரிமம் கொடுத்துள்ளது. இஸ்லாமிய நாடுகளிலும் பன்றி இறைச்சிக் கடைக்கு உரிமம் வழங்கப்படுவதில்லை. ஏனெனில் அஃது அவர்கள் மார்க்கம், நெறி, வாழ்வு முறை.


இந்து மக்களின் 5000 ஆண்டு கால வாழ்வுமுறை-நெறி, மார்க்கம் மாட்டிறைச்சி உண்ணாமையே. இந்த மரபை மதித்து மாட்டிறைச்சிக் கடை உரிமத்தை உடன் நீக்குக.

அன்பே சிவமாய்க் கொண்டிருந்து அமைதி வாழ்வாக அறமே கொள்கையாக வாழும் சைவ சமய இளைஞர்கள், யுவதிகள் போராட்டக்காரர்களாக மாறுவதைத் தூண்டாது நீங்களே!

எனவே மாட்டிறைச்சிக் கடை உரிமத்தை நீக்கி போராட்டத்தைத் தடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-29)

# இலங்கையில் நிலநடுக்கம்!

## 5 வீடுகள் சேதம்



(ஹற்றன்)

இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள ஹற்றன் - டிக்கோயா, தரவளை மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று அதிகாலை திடீரென நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் போது 24 வீடுகள் கொண்ட தொடர் லய குடியிருப்பிலுள்ள 5 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், ஏனைய குடியிருப்புக்களில் சிறு வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

அதிகாலை 5 மணியளவில் நில அதிர்வு உணரப்பட்டது. இதன்பின்பே வீடுகளின் கூரைகள் மற்றும் சுவர்கள் உடைந்தன.

இதன்போது பாதிக்கப்பட்ட வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்த ஒருவரின் மீது சுவர் இடிந்து விழுந்ததில் அவர் காயங்களுக்குள்ளாகி டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிவானந்தன் (வயது-40) என தெரியவந்துள்ளது.

இந் நிலையில் நில அதிர்வு மற்றும் வெடிப்பு சம்பவம் ஏற்பட்டமைக்கான காரணத்தை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

# அலோசியஸ், கசுன் பலிசேன தொடர்ந்தும் விளக்கமறியலில்





பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிகள் தொடர்பில் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோர் கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த இரண்டரை மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவர்கள் இரண்டு பேரும் நேற்று கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது அவர்களை எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார். இதற்கு முன்பும் பல தடவைகள் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோர் முன்வைத்த பிணை மனுக்களை நீதிமன்றம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அதிகரிப்பு சட்ட திருத்தம் குறித்து ஆராய நிபுணர் குழு

## துறைசார் அமைச்சர் பைஸர் தகவல்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள நடைமுறை சிக்கல்களை தீர்ப்பதற்கு நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்தையும் மிஞ்சியது. இந்த எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் உள்ளார்.

பெண்களின் விகிதாசாரம் 25 வீதமாக அதிகரிக்கப்பட்டமை மற்றும் கலப்பு முறை தேர்தல் என்பவற்றால் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்நிலையில், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான நிபுணர்கள் குழு விரைவில் நியமிக்கப்படும்.

இதேவேளை, மாகாண சபைகளுக்கான தேர்தலை இவ்வருட இறுதிக்குள் நடத்துவதற்கான சகல சட்டரீதியான தடைகளையும் நிவர்த்திசெய்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை அமைச்சு வழங்கும்" என்றும் தெரிவித்தார். (இ-7)

# 'மேதினத்தின் வரலாறும் முக்கியத்துவமும்' சமூக விஞ்ஞானக்கற்கை வட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

காலையடி மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் உள்ளரங்கில் மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் தலைவர் செல்வன் தி.மித்திரன் தலைமையில் இடம்பெறும்.

இக் கற்கை வட்டத்தில் மேதினத்தின் வரலாறும் முக்கியத்துவமும் என்ற தலைப்பில் பிரதான உரையை சி.கா. செந்திவேல் ஆற்றவுள்ளார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். இக் கற்கைக்கான திறந்த கலந்துரையாடல் களத்தில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர். (இ)

# நாமல் ராஜபக்ஷவுக்கு நீதிமன்றம் பிறப்பித்த மகிழ்ச்சியான உத்தரவு



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் சம்பாதித்த 15 மில்லியன் ரூபா பணத்தை என்.ஆர். கன்ஸ்சல்டன்சி நிறுவனத்தில் முதலீடு செய்தனர் என்ற குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட 5 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள இந்திக கருணாஜீவ என்பவரை இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, நீதிமன்றத்தில் ஆஜரான பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் அதிகாரிகள், சந்தேக நபர் அவுஸ்திரேலியாவில் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக கூறினர்.

இதனடிப்படையில், சந்தேக நபரை நடு கடத்தும் சட்டத்தின் கீழ் இலங்கைக்கு வரவழைக்க தேவையான நடவடிக்கை எடுத்து வருவதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த வழக்கின் சந்தேக நபர்களான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மூன்று பேருக்கு வெளிநாட்டுக்கு செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையை தளர்த்துமாறு அவர்களின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

கோரிக்கையை ஆராய்ந்த நீதவான் நாமல் ராஜபக்ஷ, சுதர்ஷனி கினேகொட, நித்தியா சேனானி சமரநாயக்க ஆகியோர் வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை தற்காலிகமாக தளர்த்தியுள்ளார். இதனையடுத்து வழக்கு விசாரணையை ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதவான், அன்றைய தினம் வழக்கின் அடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிக்கையை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான அரசமைப்புச் சபைக்கு பாதிப்பு இல்லை

## நாடாளுமன்ற செயலாளர் தம்மிக தகவல்



(கொழும்பு)

எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டமையால், புதிய அரசமைப்பு தயாரிப்பதற்கான அரசமைப்புச் சபையின் செயற்பாடுகளுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படாதென நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், நாடாளுமன்ற கூட்டத்தொடர், அதிவிசேடமான வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர், அரச நிறுவனங்கள் பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அரச கணக்குகள் பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக்கு உள்ளிட்ட சுமார் 10க்கும் மேற்பட்ட குழுக்களின் செயற்பாடுகள் இரத்தாகின.

"இந்நிலையில், அரசமைப்புச் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துரைத்த அவர், "இந்த அரசமைப்புச் சபையானது நாடாளுமன்ற தெரிவுக் குழுவாகச் செயற்படுகின்றது. ஆகையால், அந்தக் குழுவுக்கு எவ்விதமான அழுத்தங்களும் ஏற்படாது" என்றார்.

பிரதமரே, அரசமைப்புச் சபையின் தலைவராவார். எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர், எதிர்வரும் 08ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அரசமைப்புச் சபையானது மீண்டும் கூடும் என்றும் அறியமுடிகின்றது. (இ-7)




# பாடசாலை வாகனம் மீது ரயில் மோதியதில் 13 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழப்பு

(லக்னோ)

உத்தர பிரதேசத்தில் ஆளில்லா லெவல் கிராசிங்கை கடக்க முயன்ற வாகனம் மீது ரயில் மோதியதில் 13 மாணவர்கள் உயிரிழந்தனர்.

உத்தர பிரதேச மாநிலம் குஷிநகர் மாவட்டத்தில் நேற்றுக் காலை பாடசாலை மாணவர்கள் பயணம் செய்த வாகனம் ஆளில்லா லெவல் கிராசிங்கை கடக்க முயன்றது.



அப்போது அந்த வழித்தடத்தில் வேகமாக வந்த ரயில், பாடசாலை வாகனம் மீது மோதியது. விஷ்ணுபுரா காவல் சரகத்திற்கு உட்பட்ட துதி பகுதியில் இந்த விபத்து நடந்தது.

ரயில்மோதியதில்பாடசாலை வாகனம் சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டு தூக்கி வீசப்பட்டது. இந்த விபத்தில் பாடசாலை வாகனத்தில் இருந்த 13 மாணவர்கள்உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பல மாணவர்கள் படுகாயம் அடைந்தனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த உயர் அதிகாரிகள், பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

உயிரிழந்த மாணவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார். (7)

# குட்கா ஊழல் வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

குட்கா ஊழல் தொடர்பான வழக்குவிசாரணையை சி.பி.ஐ. விசாரிக்கும்படி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் தடை செய்யப்பட்ட குட்கா போன்ற பொருட்களை விற்பனை செய்ய அனுமதித்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வரும் நிலையில், இந்த ஊழல் புகார் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக்கோரி தி.மு.க. எம்.எல்.ஏ. ஜெ.அன்பழகன், சென்னை உயர் நீதிமன்றில் பொது நல வழக்கை தொடர்ந்தார். விசாரணையை உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் கண்காணிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர், டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன், சென்னை மாநகர முன்னாள் பொலிஸ் ஆணையர் எஸ். ஜார்ஜ் ஆகியோரது பெயர் இந்த ஊழல் புகார் பட்டியலில் உள்ளதால், இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பு சட்டத்தரணி பி. வில்சன் வாதிட்டார். இந்த ஊழல் வழக்கில் தொடர்புடைய உயர் அதிகாரிகளைக் காப்பாற்ற ஊழல் கண்காணிப்பு ஆணையம் நினைப்பதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டத்தரணி ஜெனரல் விஜய் நாராயணன் வாதிட்டார். மாநில ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் விசாரணை நேர்மையாக நடைபெறுவதாக மாநில ஊழல் கண்காணிப்பு ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, நீதிபதி அப்துல் குத்தூஸ் அமர்வு விசாரித்தது.

இறுதிக்கட்ட வாதங்கள் கடந்த ஜனவரி மாதம் முடிவடைந்ததும், அரசு தரப்பிலும், மனுதாரர் தரப்பிலும் எழுத்துப்பூர்வ வாதங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதையடுத்து தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

சுமார் 3 மாதத்திற்கு பிறகு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது, குட்கா ஊழல் தொடர்பான விசாரணையை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவு பிறப்பித்தனர்.

குட்கா விவகாரத்தில் மக்களுக்கு உண்மை நிலை தெரிய வேண்டும். குட்கா தொடர்பாக போதிய விளம்பரம் செய்து மக்களிடம் தகவல் பெற வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். (7)

# தினகரனுடன் இனிமேல் இணைந்து செயற்படமாட்டேன்- திவாகரன் பேட்டி



(மன்னார்குடி)

தினகரன் நடத்தும் போராட்டங்களில் நாங்கள் பங்கேற்க மாட்டோம். இனிவரும் காலங்களில் தினகரனுடன் இணைந்து செயற்பட வாய்ப்பே இல்லை என சசிகலா சகோதரர் திவாகரன் கூறியுள்ளார்.

சசிகலா சகோதரர் திவாகரன் மன்னார்குடியில்நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

வெற்றிவேல் என்பவர் யார்? எங்களை பற்றி குறை சொல்ல அவருக்கு தகுதி இல்லை. காங்கிரஸில் இருந்து விலகி அ.தி.மு.கவில் சேர்ந்தவர். மகாதேவன் இறந்த சமயத்தில் எம்.எல்.ஏ.க்களை தினகரன் அணிக்கு வரவேண்டாம் என்று நான் கூறியது உண்மை தான். அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தை ஒருபோதும் ஏற்க முடியாது.

திராவிடமும், அண்ணாவும் இல்லாத கட்சியை ஒருபோதும் ஏற்க முடியாது. அ.ம.மு.க.வுடன் எங்களுக்கு உடன்பாடு இல்லை. அம்மா அணி என்றே நாங்கள் தொடர்ந்து செயற்படுவோம். தினகரன் நடத்தும் போராட்டங்களில் நாங்கள் பங்கேற்க மாட்டோம். இனி வரும் காலங்களில் தினகரனுடன் இணைந்து செயற்பட வாய்ப்பே இல்லை.

நிர்வாகிகளையும், தொண்டர்களையும் கேட்காமலேயே தினகரன் தனது குடும்ப உறுப்பினர்களுக்காக அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தை தொடங்கியுள்ளார். அ.தி.மு.க என்ற சுவடே இருக்கக்கூடாது என்பதற்காக அ.ம.மு.க.வை தொடங்கியுள்ளார்.

சசிகலாவை சந்தித்து பொய்யான தகவல்களை கொடுத்து வருகிறார் தினகரன். தேவைப்பட்டால் அம்மா அணி என்ற பெயரிலேயே தேர்தலில் போட்டியிடுவோம். இவ்வாறு அவர் கூறினார். (7)

# காவிரி மேலாண்மை... இலக்கிய கூட்டமை...

(சென்னை)


காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்கக்கோரி அனைத்து தமிழ் இலக்கிய கூட்டமைப்பு சார்பில் சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. போராட்டத்துக்கு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வா.மு.சேதுராமன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் மு.மேத்தா, சிலம்பொலி செல்லப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

'எழுகதிர்' ஆசிரியர் அரு. கோபாலன், 'சுடரும் சுழலும் இலக்கிய உறவுகள் கூட்டமைப்பு' பொதுச்செயலாளர் ச.சண்முகநாதன், மக்கள் தேசிய கட்சி தலைவர் சேம. நாராயணன், எழுத்தாளர்கள் ஈரோடு தமிழன்பன், மறைமலை இலக்குவனார், ஏர்வாடி ராதாகிருஷ்ணன், க.ராவணன், தி.வ. மெய்கண்டார், அ.தங்கவேல், ராமசாமி உட்பட எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



# ஸ்டெர்லைட் ஆலையை மூடு...

## வைகோ வழக்கு



(சென்னை)

தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு வலியுறுத்தி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆலையை மூடுமாறு கோரியும், விரிவுபடுத்தல் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனு ஊடாக வைகோ தெரிவித்துள்ளதாவது,

"தூத்துக்குடி மீளவிட்டான் பகுதியில் ஸ்டெர்லைட் ஆலை இயங்குகிறது. இந்த ஆலைக்காக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வழங்கிய அனுமதிப்பத்திரம் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிந்துவிட்டது. இந்த ஆலையால் அப்பகுதியில் புற்று நோய் பரவும் அபாயும் உள்ளது.

மேலும் சுற்றுச்சூழலும் மாசடைந்துள்ளது. எனவே இந்த ஆலையால் அப்பகுதி மக்கள் பல்வேறு தொந்தரவுகளை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில் ஸ்டெர்லைட் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்யும் பணியில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு மத்திய-மாநில அரசுகளிடம் முறையாக அனுமதி பெறப்பட வில்லை. எனவே தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை இயங்குவதற்கும், ஆலையை விரிவாக்கம் செய்வதற்கும் தடை விதித்து உத்தரவிட வேண்டும்" என குறித்த மனு ஊடாக வலியுறுத்தி வைகோ வழக்கு தாக்கல் செய்துள்ளார். (7)

# நிலக்கரியைவிட கறு... இருக்கும் புதிய கி...

## இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

நிலக்கரியை விட கறுப்பாக இருக்கும் புதிய கிரகம் ஒன்றை இங்கிலாந்து கீல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பூமிப்பந்துக்கு மேலே ஏராளமான கிரகங்கள் சுற்றி வருகின்றன. இவற்றில் பல கிரகங்கள் இன்னும் கண்டு பிடிக்கப்பட வில்லை.

இந்த நிலையில் இங்கிலாந்து கீல் பல்கலைக் கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் புதிய கிரகம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.

# வெளிநாடு



# ...மை வாரியம் அமைக்கக்கோரி ...மைப்பினர் உண்ணாவிரதம்



போராட்டத்தின்போது வா.மு.சேதுராமன் நிருபர்களிடம் தெரிவித்தார். சங்க காலம் தொட்டே காவிரி நீரின் பெருமையும், அதன் பங்கீடும் வரலாற்றில் சொல்லப் பட்டு வருகிறது. ஆனால் சட்ட நெறிமுறை களை மீறி காவிரியின் குறு க்கே அணைகளை கட்டி கர்நாடக அரசு செயற்பட்டு வருகிறது. பல இடர்பாடு களை கடந்து காவிரி மேலா ண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும், மத்திய அரசு அதை செய்ய வில்லை.

'ஸ்கீம்' என்ற ஒற்றை வார்த்தையை வைத்துக் கொண்டும், கர்நாடகா மாநில தேர்தலை மனதில் வைத் தும் மத்திய அரசு தமிழகத் துக்கு பெரும் துரோகம் புரி ந்து வருகிறது. சர்வாதிகாரி போல செயற்பட்டு வரும் மோடி தமிழகத்தை தொடர் ந்து வஞ்சித்து வருகிறார். தமிழகத்தின் தனித்தன்மை இனியும் குலையாமல் இரு க்க காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்கவேண்டும். இவ் வாறு அவர் தெரிவித்தார். (7)

# இரட்டைக் குண்டுவெடிப்பில் மூன்று பேர் படுகாயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூ லில் நடை பெற்ற இரட்டைக் குண்டு வெடிப்பு தாக்குதலில் பொது மக்கள் 3 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட் டின் தலை நகர் காபூலில் பொலிஸ் சோதனை சாவடி செயற்பட்டு வருகிறது. இந் தச் சோதனை சாவடி அரு கில் இரண்டு இடங்களில் அடை யாளம் தெரியாத மர்ம நபர் கள் திடீரென குண்டு வீசி தாக்கு தல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் அப் பகுதியில் இருந்த பொது மக்களில் 3 பேர் படுகாயம் அடைந்தனர். தகவலறிந்து அங்கு வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு சிகிச் சைக்காக அனுப்பி வைத்த னர்.

பொதுமக்களை குறிவை த்து இந்த வெடிகுண்டு தாக் குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்த னர். (7)

# ...றுப்பாக ...கிரகம்

இந்த கிரகத்தை அமெரிக்காவின் ஹெப்பர் தொலை நோக்கி மூலம் அவர்கள் கண்டுபிடித்தனர். அந்த கிர கம்பூமியில் இருந்து 470 ஒளி ஆண்டு தூரத்துக்கு அப்பால் உள்ளது.

இதற்கு 'வாஸ்ப்-104 பி' என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். புதிய கிர கம் மிகவும் அடர்ந்த கறுப்பாக உள்ளது. அதாவது நிலக் கரியை விட கறுப்பாக இருக் கிறது.

பொதுவாக கிரகங்கள் பக்கத்தில் உள்ள நட்சத்திரங் களின் ஒளியை உமிழும் தன்மை கொண்டவை. இதன் காரணமாக அந்த கிரகங் கள் ஓரளவு வெளிச்சம் கொண்டதாக இருக்கும்.

ஆனால், இந்த கிரகத் துக்கு உமிழும் தன்மை மிகவும் குறைவாக உள் ளது.

நட்சத்திரங்களில் இரு ந்து கிடைக்கும் ஒளியில் 99 சதவீதத்தை உள்வாங்கிக் கொண்டு ஒரு சதவீதத்தை மட்டுமே வெளிப்படுத்துகி றது.

இதனால் தான் அந்த கிர கம் இவ்வளவு கறுப்பாக உள் ளது. நமது பூமிக்கு அருகில் இருக்கும் வெள்ளி கிரகம் 70 சதவீத ஒளியை உமிழ் கிறது.

வியாழன் போன்ற கிர கங்களில் வாயுக்கள் அதி கம் உள்ளன. இதனால் ஒளியை ஈர்ப்பது அதிகமாக உள்ளது. இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள கிரகமும் வியாழனை போன்ற அதிக வாயுக்கள் கொண்ட கிரக மாக இருக்கலாம். இதனால் தான் அதிக ஒளியை ஈர்த்து கொள்கிறது என்று விஞ்ஞா னிகள் தெரிவித்தார்கள். (7)

# அமெரிக்கா அணுவாயுத ஒப்பந்தங்களில் உறுதியாக இல்லாவிடின் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்

## ஈரான் ஜனாதிபதி எச்சரிக்கை

(தெஹ்ரான்)

அணு ஆயுத ஒப்பந்தத் தில் இருங்கள், இல்லை யேல் கடுமையான விளைவு களை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் ஜனாதிபதியான ஹசன் ரூஹானி சமீபத்தில் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளிக்கையில், கடந்த 2015 ஆம் ஆண்டில், அப் போதைய அமெரிக்க ஜனாதி பதியான பராக் ஒபாமா ஈரா னுக்கும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 6 வல்லரசு நாடு களுக்கும் இடையே அணு சக்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டது.




அதில், அணு சக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவோம் என்றும் நாங்கள் தெரிவித்தி ருந்தோம். இதன் காரண மாக எங்கள் நாட்டின் மீது இருந்த பொருளாதார தடை கள் நீக்கப்பட்டன.

இந்நிலையில் அமெ ரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுட னான அணு சக்தி ஒப்பந் தத்தை முறிப்பேன் என்று கூறி வருகிறார். ஈரான் அணு ஆயுத சோதனைகள் மேற் கொள்வதைத் தடுப்பதற்காக ஈரான் மீது புதிய பொருளா தாரத் தடைகளையும் ட்ரம்ப் விதித்துள்ளதை குறிப்பிட் டுள்ள அவர், அமெரிக்கா அதன் அணுஆயுத ஒப்பந்தங் களில் உறுதியாக இல்லா விட்டால் அந்நாடு கடுமை யான விளைவுகளை சந்திக் கும் என ஹசன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (7)

# அமெரிக்க வாலிபருக்கு 241 ஆண்டுகள் சிறை!

## மேன்முறையீட்டில் உறுதி



(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொலை, கொள்ளை உள்ளிட்ட பல குற்றங்களில் சிறைத்தண் டனை அனுபவித்து வந்த வாலிபருக்கு 241 ஆண்டு கள் சிறைத் தண்டனை மேன்முறையீட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

அமெரிக்காவை சேர்ந்த பாபி போஸ்டிக் இவர் துப்பாக் கியால் சுட்டுக் கொலை, கொள்ளை மற்றும் கார் திருட்டு உள்ளிட்ட பல குற் றங்களில் ஈடுபட்டு வந்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு இவரை பொலிஸார் கைது செய்தனர். அப்போது இவரது வயது 16. இந்த நிலையில் அவர் மீதான புகார்கள் நிரூ பிக்கப்பட்டதால் அவருக்கு 241 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

எனவே அவர் தொடர்ந்து சிறையில் தண்டனை அனு பவித்து வருகிறார். அதை எதிர்த்து அமெரிக்க உச்ச நீதிமன்றில் அவர் மேன் முறையீடு செய்தார்.

வழக்கை விசாரித்த நீதி மன்றம் அவருக்கு விதிக்கப் பட்ட தண்டனையை உறுதி செய்தது. மேலும் அவருக்கு 112 ஆண்டுகள் வரை பரோல் வழங்கவும் அனுமதி மறுத்து தீர்ப்பளித்தது. (7)

# வடகொரியாவின் அணு ஆயுத சோதனை தளம் சேதமடைந்துள்ளது- சீன விஞ்ஞானிகள் தகவல்



(பீஜிங்)

வடகொரியாவின் அணு வாயுதச் சோதனைத்தளம் பகுதியளவில் சேதமடை ந்துள்ளதுடன், இனிமேல் அத்தளத்தை பயன்படுத்த முடியாத நிலை காணப்படு வதாகவும், சீனா விஞ்ஞானி கள் தெரிவித்துள்ளனர்.

வடகொரியாவின் மாண் டாப் மலைப்பாங்கான பகுதி யில் பூங்கேரி சோதனைத் தளம் உள்ளதுடன், இத்தள த்திலிருந்து கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 6 அணு வாயுதச் சோதனைகளை வடகொரியா நடத்தியுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு செப்டெம்பரில் வடகொரியா அதன் ஆறாவது அணுச் சோதனையை நடத்தியதைத் தொடர்ந்து, அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கத் தினால் மலையின் உட்பகுதி சேத மடைந்ததாக, சீன அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பல் கலைக்கழகம் நடத்திய ஆய் வின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும், எந்தவித அணுச் சோதனைகளுக்கும் மாண் டாப் மலைப்பகுதியை பயன் படுத்த முடியாதெனவும், அந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையில், வட கொரியாவின் ஏவுகணை மற்றும் அணுச்சோதனை கள் காரணமாக, கடுமை யான முறுகல் நிலையிலி ருந்த வடகொரியாவும் அமெ ரிக்காவும் எதிர்வரும் ஜூலை யில் சமாதானப் பேச்சுவார்த் தையில் ஈடுபடவுள்ளன.

இந்நிலையில், தமது ஏவுகணை மற்றும் அணுச் சோதனைகள் கைவிடுவ துடன், அணுச்சோதனைத் தளத்தையும் மூடுவதாக கடந்தவாரம் வடகொரியா அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (7)

# வெளிநாட்டுக் கடன்சுமை அதிகரிப்பு

## ரூபாவின் பெறுமதி தொடர்ந்து சரிவு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ள நிலையில், ஒரே வாரத்தில் இலங்கையின் கடன்சுமை 47 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு இந்த மாதம் தொடர்ச்சியான வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது.

இந்த வாரத் தொடக்கத்தில், 157.46 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி நேற்று முன்தினம் 159.04 ரூபாவாக வீழ்ச்சி கண்டது. இந்த ஒரு வாரத்தில் மாத்திரம் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 1.58 ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையின் கடன் சுமையும் வெகுவாக அதிகரித்து வருவதாக இலங்கை மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சுமார் 30 பில்லியன் டொலர்களாக இருந்தது. கடந்த ஒரு வாரத்தில், இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தினால் கடன் சுமை 47 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. என்றும் தெரியவருகிறது. (இ-7)

# திக்கம் வடிசாலையைப் புனரமைத்துத் தருமாறு அமைச்சர் சுவாமிநாதனிடம் ஈ.பி.டி.பி.கோரிக்கை



(கொழும்பு)

வடமராட்சி திக்கம் வடிசாலையினை நவீன முறையில் மறுசீரமைத்து பனைசார் தொழிலாளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நிர்வாகச் செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சருடனான சந்திப்பின் போதே ஸ்ரீரங்கேஸ்வரன் இவ்வாறு கோரிக்கையினை விடுத்தார்.

திக்கம் வடிசாலை கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இயங்காமல் உள்ளமையால், அத்தொழிற்சாலையை நம்பி வாழும் தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பனைசார் உற்பத்தித் தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்கள் மிகவும் வறுமையின் பிடியில் வாழ்ந்து வருவதையும் தெளிவுபடுத்தியதுடன் அத்தொழில் சமூகம் சார்ந்த மக்களின் வாழ்வியலை கட்டியெழுப்ப வேண்டும் என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன், திக்கம் வடிசாலையினை நவீன முறையில் புனரமைப்புச் செய்வதற்கு திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும், அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தனியான திட்ட முகாமையாளர் ஒருவரை நியமித்து வெகு விரைவில் அதனை நடைமுறைப்படுத்த தனது அமைச்சு தேவையான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் உறுதியளித்தார். (இ-7)

# நல்லிணக்கச் செயன்முறைகள் குறித்து இலங்கையுடன் கனடா விசேட பேச்சு



(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயன்முறைகள் மற்றும் ஏனைய விவகாரங்கள் தொடர்பாக இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் பேச்சுக்கள் நடந்தப்பட்டுள்ளன. இலங்கை திறைசேரியில் நேற்று முன்தினம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்த இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன் மற்றும் பூகோள விவகாரங்களுக்கான கனேடிய பணியகத்தின் தெற்காசியப் பிரிவு பணிப்பாளர் டேவிட் ஹார்ட்மன் ஆகியோர் இந்தப் பேச்சுக்களை நடத்தினர்.

டேவிட் ஹார்ட்மனுடன் கனேடிய தரப்பில், அரசியல் விவகாரங்களுக்கான செயலர் ஜென் ஹார்ட், கனடா ஏற்றுமதி அபிவிருத்தி உதவித் தலைவர் வில்லியம் பிறவுண், கனேடிய வணிக அமைப்பின் ஆசிய பணிப்பாளர் யொவோன் சின், கனேடிய தூதரக வணிக ஆணையாளர் அவன்ரி கூன்ஞ்ஞே ஆகியோரும் கலந்து கொண்டனர். நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுடன், நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தைச் சேர்ந்த மனோ தித்தவெல, நிதி அமைச்சின் செயலர் சமரதுங்க ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்தப் பேச்சுக்களில் இலங்கையின் அபிவிருத்தியில் கனேடிய அரசாங்கம் மற்றும் கனேடிய வர்த்தகத்தின் பாங்கு, முதலீடு மற்றும் நல்லிணக்கச் செயன்முறைகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. (இ-7)

# நாட்டின் சுபீட்சத்துக்காக ஒரு இலட்சம் காவி வஸ்திரங்கள் அன்பளிப்புப் பூஜை

(கொழும்பு)

நாட்டின் சுபீட்சம் மற்றும் அமைதி, வளம் கொழிக்கும் விவசாயம் என்பவற்றை இலக்காகக் கொண்டு ஒரு இலட்சம் காவி வஸ்திரங்களை அன்பளிப்புச் செய்யும் பூஜை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையான இரண்டு மாத காலப்பகுதிக்குள் இப்பூஜைக்குத் தேவையான காவி வஸ்திரங்கள் பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்படவுள்ளன.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட காவிவஸ்திரங்களை ஜூன் 30 ஆம் திகதி அநுராதபுரம் ருவன்வெலிசாய மகா விகாரையில் பூஜை செய்யப்படவுள்ளது.

பின்னர் நாட்டிலுள்ள ஒவ்வொரு பௌத்த துறவிக்கும் மூன்று காவி வஸ்திரங்கள் வீதம் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக நாட்டின் அனைத்து விகாரைகளிலும் விசேட பௌத்த வழிபாடுகள் மற்றும் சமய அனுட்டானங்களை மேற்கொள்ளவும் அரசாங்கத்தின் ஆதரவுடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நீங்கவும், அமைதி மற்றும் வளம் கொழிக்கும் விவசாய உற்பத்திகளைப் பெறவும் இவ்வாறான மத அனுட்டானங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பௌத்த சாசன அமைச்சுடன் இணைந்து கமநல சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க மேற்கொண்டுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# வீடு தங்காதவர்கள்

காலையில் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போனால் இரவு வெகுநேரம் கழித்துத் திரும்புகிறவர்கள் இருக்கிறார்கள்.

வேலை செய்கிறவர்கள் தங்களது சம்பளத்திற்காக இப்படிச் செய்தால் இவர்களை நாம் குறை சொல்ல முடியாது. ஆனால் ஒரு தொழிலில் இருப்பவர் எப்போது பார்த்தாலும் பணம் பணம் என்று பேய்த்தனமாக அலைந்து கொண்டு குடும்பத்தைச் சரிவரக் கவனிக்காமல் குடும்ப உறுப்பினர்களின் உணர்வுகளைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் இருந்தால் அவர்கள் தங்கள் இயல்புகளை மாற்றிக் கொள்ள வேண்டும். சில இளைஞர்கள் வீடே தங்குவதில்லை. சரி படிப்பு விடயமாகவோ, வேலை விடயமாகவோ அலைகிறார்களா என்றால் அதுவும் இல்லை. தகுந்த காரணங்களின்றி வீடு தங்காதவர்கள் இவர்கள்.

வீடு தங்காதவர்களைக் குடும்ப உறுப்பினர்களாகக் கொண்டவர்கள் இரண்டே இரண்டு காரியங்களைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். முதலாவது இவர்களை எப்போது பார்த்தாலும் கரித்துக் கொட்டுவது, இரண்டாவது மற்றவர்களிடம் புலம்பித் தள்ளிவிட்டு இவர்களைத் திருத்தவே இயலாது என்கிற நிலைக்குப் போய் நம்பிக்கை இழந்து விடுகிறது. இந்த இயல்புகள் இரண்டையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

Home,Sweet Home என்பார்கள் ஆங்கிலத்தில். எனவே இல்லம் என்பது இனிய இல்லமாக மாற வேண்டும். வீடு தங்காதவர்கள் பெரும்பாலும் வீட்டில் அன்பு மறுக்கப்பட்டவர்களே.

அலுவலக நேரம் கடந்தும் அலுவலகத்தில் பணி புரிந்து கொண்டிருந்த ஒருவரிடம் ஏன் இப்படி என்று கேட்டதற்கு வீட்டிற்குப் போனால் என் மனைவி நைநை என்று பிடுங்குவாள் என்றார். சும்மா ஊர் சுற்றிக் கொண்டிருந்த ஒரு மாணவரிடம் கேட்டதற்கு, எங்கப்பா என்னைக் கண்டாலே கோவிச்சுக்கிறாரு. அதனால்தான் என்றான்.

பணம் பணம் என்று அலைகிறவர்களிடம் எனக்கு நீங்கள் சம்பாதித்துக் கொண்டு வருவதைவிட வீடு தங்குவதுதான் பிடித்த விடயம் என்பதைப் புலப்படுத்திவிட வேண்டும்.

அதேநேரத்தில் நமக்கு அவ்வளவு கடன் இருக்கிறது. மகள் பெரியவளாகி விட்டாள். வீடு கட்ட வேண்டும். எனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று ஏகப்பட்ட விண்ணப்பங்களைப் போட்டு பணத்தேவையை அதிகப்படுத்திவிட்டு வீடு தங்கவில்லை என்றும் புலம்பிக் கொண்டிருந்தால் அது அர்த்தமுள்ள செயலாக இருக்க முடியாது.

**லேனா தமிழ்வாணன்**

# கொழும்பில் தமிழர்கள் படுகொலை! போர்க்குற்ற ஆதாரங்களை உள்ளடக்கிய அதிர்ச்சி அறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தில் விசாரணைக்காக கொழும்பிற்கு அழைத்து செல்லப்பட்ட தமிழர்களை வயரால் கழுத்தை நெரித்தும், கத்தியால் குத்தியும், சாகும் வரை அடித்தும் கொன்றதாக இலங்கையின் விசாரணை அதிகாரி ஒருவர் ஜஸ்மின் சூக்காவை நிறைவேற்றுப் பணிப்பாளராக கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்குமான செயற்றிட்டத்திடம் [ITJP] சாட்சியமளித்துள்ளார்.

இது தொடர்பான அதிர்ச்சி நிறைந்த அறிக்கை ஒன்றை ஐ.ரி.ஜே.பி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குற்றத்தில் ஈடுபட்ட 50 சிறப்பு இராணுவ பொலிஸாரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் ஆணையாளருக்கும் கையளிக்கப்படவுள்ளது.

அந்த அறிக்கை தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐ.நா. அமைதி காக்கும் படையில் பணியாற்றுவதில் இருந்து தடை செய்யப்பட்ட வேண்டிய விசேட அதிரடிப்படையின் 50 இற்கும் மேற்பட்ட இலங்கை சிறப்பு இராணுவ பொலிஸாரின் பெயர்களை கொண்ட ஒரு இரகசிய பெயர்ப்பட்டியலை ஐ.ரி.ஜே.பி தயாரித்துள்ளது.

விசேட அதிரடிப்படையினர் உட்பட பாதுகாப்பு படைகள் திட்டமிட்ட குற்றச் செயல்களை புரிந்துள்ளார்கள் என ஐ.நா.தெரிவிக்கும் சூழலில் இந்த தனிப்பட்ட நபர்கள் குற்றவாளிகளாக, சந்தேகிக்கப்படுவார்களாக அல்லது இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முன்னரங்க நிலையில் போரில் ஈடுபட்டவர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

ஆபிரிக்காவில் ஐ.நாவின் அமைதி காக்கும் படையில் ஈடுபட்டுள்ள இலங்கையின் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் 2006-2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் கண்மூடித்தனமாக கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தவர். இலங்கையில் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்பான அல்லது அதனுடன் சம்பந்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 24 விசேட அதிரடிப்படையினரின் பெயர்களையும் இலங்கையின் போரின் போது முன்னரங்க முக்கிய சண்டைபணிகளில் ஈடுபட்ட 32 விசேட அதிரடிப்படை அதிகாரிகளதும் பெயர்களை கொண்டுள்ளது.

இதனால் இவர்கள் ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கையில் பணியாற்றுவதில் இருந்து தடை செய்யப்பட வேண்டும். பொலிஸ் கொமாண்டோக்களும்தற்போது வெளிநாடுகளுக்கு ஐ.நா. அமைதி காக்கும் படையினர்களாக அனுப்பப்பட்டு வருகின்றார்கள்.

அத்துடன் இராணுவத்தை போன்று கடுமையான மீளாய்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும். சாட்சியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டால் படங்கள், பெயர்கள், என அனைத்து தகவல்களையும் இந்த மீளாய்வு நடவடிக்கைகளுக்காக வழங்க தயாராக இருக்கின்றோம்.

இந்த அறிக்கை விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து செயற்பட்ட சிங்களவர்கள் மற்றும் தமிழ் ஒட்டுக்குழுக்களின் உறுப்பினர்கள் வழங்கிய சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. கொழும்பில் விசாரணைக்காக யுத்த காலத்தில் அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களை கயிற்றால் அல்லது வயரால் கழுத்தை நசுக்கி கொல்லுவோம், கத்தியால் குத்துவோம் அல்லது சாகும் வரை அடித்து கொல்லுவோம். என கொழும்பை சேர்ந்த ஒரு இராணுவத்தின் விசாரணை அதிகாரி ஐ.ரி.ஜே.பியிடம் கூறியுள்ளார்.

அனைத்து பாதிக்கப்பட்ட தரப்பும் இறுதியில் கொல்லப்பட்டு விட்டதாக அவர் கூறியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் பாலியல் வல்லுறவுகளை அனுமதித்தல், மறைமுக கொலைகள் என்பவற்றை இந்த விசேட அதிரடிப்படையே அரங்கேற்றி வந்ததாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

இதற்கு ஆதரவாக தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து பிரிந்து சென்ற கருணா குழுவும் இருந்து வந்துள்ளது என பல விடயங்களை அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (இ-4)

## கால்வாயில் வீழ்ந்தது ஜீப்

(பதுளை)

பதுளை - மஹியங்கனை வீதியில் பயணித்து கொண்டிருந்த வாகனம் ஒன்று வியானி கால்வாயில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பொலநறுவை - ஹிங்குராங்கொடை பிரதேச வர்த்தகர் ஒருவரின் ஜீப் ஏக வாகனமே இவ்வாறு நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மற்றும் பிரதேச மக்களின் உதவியுடன் வாகனத்தினை கால்வாயிலிருந்து வெளியே கொண்டு வந்துள்ளனர். (இ-7)

## ஜனாதிபதி எடுத்துள்ள முக்கிய தீர்மானம்; முழு இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ள பிரதமர்

(கொழும்பு)

அனைத்து அமைச்சுக்களையும் தன்னுடைய நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் புதிய அமைச்சரவை நியமனம் இடம்பெற்ற கையோடு இந்தத் தீர்மானத்தை அமுலாக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமருடன் அமைச்சரவை மாற்றம் குறித்தான கலந்துரையாடல்களின் போது தனது இந்த தீர்மானத்தை ஜனாதிபதி நேரடியாகவே தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி அனைத்து அமைச்சுகளின் செயற்பாடுகளையும் கண்காணிக்கும் வியூகம் ஒன்றை அமைப்பதுடன், அமைச்சுக்களுக்கு ஜனாதிபதி திடீர் விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிடவும் உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஜனாதிபதியின் இந்த உத்தேசத்திற்கு பிரதமர் முழு இணக்கப்பாட்டை வெளியிட்டிருப்பதாக மேலும் தெரிய வருகின்றது. (இ-7)

## ஹக்கீமுடன் கனேடிய அரசின் வர்த்தக தூதுக்குழுவினர் பேச்சு



(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டு முயற்சிகளில் அண்மைக்காலமாக அரசு கூடுதல் கவனம் செலுத்துவதால், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் கருத்திட்டங்களிலும் அதற்கு தாம் முக்கியத்துவம் அளிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தம்மை சந்தித்துக் கலந்துரையாடிய கனேடிய அரசின் உயர்மட்ட வர்த்தக தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார்.

கனேடிய அரசின் ஏற்பாட்டில் இலங்கை வந்துள்ள உயர்மட்ட வர்த்தக அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினர் அமைச்சர் ஹக்கீமின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் அவரைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டபோது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நகர மயமாக்கல் காரணமாக ஏற்படக்கூடிய சுத்தமான குடிதண்ணீருக்கான கேள்விகள் அதிகரித்து வருவதால் அவற்றுக்கு உரிய தீர்வுகளை வழங்குவதிலும், கிராமப்புறங்களுக்கான நீர் மூலங்களைக் கண்டறிந்து அவற்றை மக்கள் பாவனைக்குப் பயன்படுத்துவதிலுள்ள சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கும் முதலீட்டாளர்களின் தேவைப்பாடும் அவர்களது பங்களிப்பும் இன்றியமையாதது.

அவ்வாறே, கழிவுநீரை சுத்திகரித்தல் மற்றும் திண்மக் கழிவகற்றல் என்பவற்றைப் பொறுத்தவரை தமது அமைச்சு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினூடாக பல்வேறு செயற்றிட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துள்ளது.

கிராமப்புறங்களில் சுத்தமான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் கனேடிய அரசின் ஒத்துழைப்புடன் முதலீட்டாளர்களும் தொழில் முயற்சியாளர்களும் முன்னரை விட பங்களிப்பைச் செய்ய முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அத்துடன், இளமையும், செயற்றிறனும் மிக்க கனடா பிரதமர் அண்மைக்காலமாக சர்வதேச மட்டத்தில் சிறப்பான அரசியல் தலைவர்களில் ஒருவராகத் திகழ்கின்றார்" என்றார்.

கனேடிய பிரதிநிதிகள், அமைச்சர் ஹக்கீமிடம் முதலீட்டு முயற்சிகளை ஒருங்கிணைப்பது பற்றி விபரித்துக் கூறினார். (இ-7)

## சுதந்திரக் கட்சியில் மறுசீரமைப்பு துமிந்தவின் பதவிக்கு ஆபத்து!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மே மாதம் இரண்டாம் வாரத்திற்கு முன்னர் (மே 08 - 15) மறுசீரமைக்கப்படவுள்ளதாக, அந்தக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் இந்த மறுசீரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 16 பேர் அந்தக் கட்சியில் இருந்து வெளியேறியதன் பின்னர், நடைபெறவுள்ள முதலாவது மத்திய செயற்குழுக் கூட்டமாக இது அமைந்துள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் வெளியேறி கட்சியை புதுப்பிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென குறித்த 16 உறுப்பினர்களும் கோரியுள்ளனர். இதேவேளை, சுதந்திரக் கட்சி, அரசாங்கத்துடனான தொடர்புகளை துண்டிக்க வேண்டுமென ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் திசாநாயக்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பதவி துறந்த சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், துமிந்த திசாநாயக்கவை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் கட்சியை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார். கொழும்புபில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## கட்டுநாயக்கவுக்கு வந்த விமானம் திடீரென மத்தளவுக்கு மாற்றம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க வந்த விமானம் ஒன்று மத்தள விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக விமானம் மாற்றி அனுப்பப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய கடமை நேர நிர்வாகி தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு நிலவிய அதிக மின்னல் தாக்கம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஓமானில் இருந்து வந்த அந்நாட்டு விமான சேவைக்கு சொந்தமான WI - 373 விமானம் ஒன்றே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விமானம் நேற்று முன்தினம் இரவு 7.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலைய யத்தில் தரையிறங்க இருந்த போதிலும், சீரற்ற காலநிலை காரணமாக 8.24 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

குறித்த விமானத்தில் 86 பயணிகளும் 15 ஊழியர்களும் பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காணாமல் போனோர் பணியக உறுப்பினர்களை வேண்டா வெறுப்பாக நியமித்த ஜனாதிபதி

## உண்மையை உளறிய மகிந்த



(கொழும்பு)

காணாமல் போனோர் பணியகத்தின் உறுப்பினர்கள் சிலரை வேண்டா வெறுப்பாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள அவர், "காணாமல் போனோர் பணியகத்தின் ஆணையாளர் பதவிக்கு அரசியலமைப்பு சபையினால் பரிந்துரைக்கப்பட்ட சிலரை நியமிப்பதில், ஜனாதிபதிக்கு உடன்பாடு இருக்கவில்லை.

19ஆவது திருத்தச்சட்டத்தினால் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு விட்டதால், அரசியலமைப்பு சபையினால் பரிந்துரைக்கப்பட்டவர்களை நியமிப்பதை விட அவருக்கு வேறு வழி இல்லை.

அரசியலமைப்பு சபையின் பரிந்துரைக்கு அமைய, காணாமல் போனோர் பணியகத்தின் உறுப்பினர் நியமனத்தை இரண்டு வாரங்கள் மாத்திரமே அவரால் தள்ளிப்போட முடிந்தது.

தனது நிலைப்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்" என்றும் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காணாமல் போனோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிக்க விரும்பாதவர்களின் பெயர்களை அமைச்சர் மகிந்த சமரசிங்க வெளியிட மறுத்து விட்டார். (இ-7)

## ஜனாதிபதியாக இரண்டு முறை கோத்தபாய பதவிவகிப்பார்

### ஜோதிடர் விஜித கூறுகிறார்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையில் இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகிப்பார் என சர்ச்சைக்குரிய ஜோதிடர் விஜித ரோஹண விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவின் ஜாதகத்திற்கு அமைய அவர் எதிர்காலத்தில் எதிர்க்கட்சி தலைவராகவோ அல்லது பிரதமராகவோ பதவிக்கு வரும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தினேஷ் குணவர்த்தனவின் ஜாதகம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஜாதகத்திற்கு இணையான ராஜயோகத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், தினேஷ் குணவர்த்தனவுக்கு கட்டாயம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கும் என உறுதியாக கூறியுள்ளார்.

இதேவேளை கிரக மாற்றத்தினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயிராபத்து இருப்பதாக ஜோதிடர் விஜித ரோஹண விஜேமுனி ஆரூடம் வெளியிட்டிருந்தது டன். அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முன்னாள் பிரதியமைச்சர் சரத்குமாரவுக்குப் பிணை

(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன உள்ளிட்ட 6 பேர் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் அரசியல் செயற்பாடுகளுக்காக 14 கோடி ரூபாயை பயன்படுத்தியது உள்ளிட்ட ஆறு குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்ட பின்னர் பிரதிவாதிகள் தலா 25000 ரூபா ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். (இ-7)

# கயிலாச யாத்திரை


## ஓர் அனுபவப் பகிர்வு 32

பரமசாமி பஞ்சாட்சரம்

இராவணன் ஏன் கயிலையைத் தூக்க முற்பட்டார் என்பதை அறிய முற்பட்டேன். நாரதர் புராணக் கதை தான் உதவியது. ஒரு முறை நாரதர் இராவணனைச் சந்தித்து "இராவணா சிவபெருமான் 14 உலகங்களையும் ஆளும் பலத்தைத் தந்துள்ளார். அதைச் சோதித்துப் பார்த்தாயா?" என்று கேட்டார். "சிவபெருமான் கொடுத்தால் சரியாகத்தானே இருக்கும்" என்று இராவணன் பதிலளித்தான். "சிவபெருமான் சிலவேளைகளில் அர்த்தமில்லாமற் சொல்லுவார் ஏதேனும் ஒரு பெரிய பொருளைத் தூக்கிப்பார்" என்று நாரதர் கூறி மறைந்தார்.

இராவணன் எது பெரியது என்று யோசித்தான். கயிலாயமலை தானே பெரியது என்று தீர்மானித்துக் கயிலை சென்று கயிலை மலையைத் தூக்கினான். கயிலை மலையைத் தூக்கி விட்டான். அப்போது கயிலை அசைந்தது. சிவன் இராவணனின் பக்தியையும் பலத்தையும் கண்டு மகிழ்ந்தார்.

இராவணனோ தனக்குப் பலம் இருக்கின்றது என்று சந்தோசப்பட்டு கயிலையை அதே இடத்தில் வைக்கப் போகும் நேரத்தில் பார்வதி அம்மன் கயிலை அசைவதைக் கண்டு அஞ்சி "மலை ஏன் அசைகிறது" என்று சிவனிடம் கேட்டார். அப்போது சிவபெருமான் எனது பக்தர் ஒருவர் மலையைத் தூக்கித் தனது



பலத்தைப் பரீட்சிக்கிறார் என்று சொன்னார். உடனே பார்வதி "அப்படிச் செய்ய விடவேண்டாம்" என்று வேண்டினார். எம் பெருமான் அப்போது தன் காலின் சுண்டு விரலால் மலையை அழுத்த மலையின் கீழ் இராவணன் அகப்பட்டுக் கொண்டார். இராவணனின் தோள் நெரிக்கப்பட்டதுடன் ஒரு கையும் முறிந்தது. எவ்வளவு முயன்றும் தன்னை விடுவிக்க முடியவில்லை. தனது பலம் முழுவதையும் கூட்டித் தன்னை அழுத்தும் மலையை அகற்ற முயன்றார். முடியவில்லை. கர்வகுணம் படைத்தவராயினும் இலங்கேசன் ஒரு ஞானி. மலை சிவனால் அழுத்தப்படுகிறது என்பதை உணர்ந்து நாதமே உருவான கயிலை நாதனுக்கு பக்தி இசைபாடலாம் என்று முடிவெடுத்தார். மலை நெரித்ததினால் தனது சிதைந்து போன கையை ஒடித்து கை நரம்புகளை வீணை நரம்புகளாகப் பிணைத்து வீணையாக மீட்டிச் சாமகானம் பாடினார்.

"செஞ்சடைவனத்திலிருந்து செல்லுகின்ற கங்கையால்
மிஞ்சுகின்ற புனிதமுற்று மிளிருகின்ற கழுத்திலே
நஞ்சு கொண்ட பாம்பணிந்து டம டம டம என
அஞ்சும் வண்ணம் ஒலி எழுப்பி உடுக்கைதாங்கி ஆடுவோய்
ஓங்குகின்ற மங்களத்தை உதவ வேண்டும் தேவனே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய"

என்று ஆரம்பித்துப் பதினாறு பாடல்களைப் பாடிக் கடைசியில் "சகாரத் தாண்டவம் என்கிற நடனத்தினை ஆடுகின்ற இறைவனே என்னைப் பற்றியுள்ள இத் துன்பத்திலிருந்து காப்பாற்றுவாயாக" என்று பாடினார். சிவன் இப்பாடலிலே தொனித்த நாதத்தினால் மகிழ்ந்து தனது காலின் சுண்டு விரலை எடுத்து இராவணன் முன் தோன்றினார். அப்போது இராவணன் தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து தனது உடைந்த கைகளுடன் வீணையை மீட்டிச் சாமகானம் பாடினார்.

இதைச் செவிமடுத்த பரமசிவன் மகிழ்ந்து "இராவணா! உனது தலையோ, கையோ, உடலின் எந்தப் பாகமோ எத்தனை முறை துண்டிக்கப்பட்டாலும் அவைகள் மறுபடி வளரட்டும்" என்று திருவாய் மலர்ந்தார். அப்போது முறிந்த கை நெரித்த தோள் எல்லாம் பழைய நிலைக்கு வந்துவிட்டன.


இச்சம்பவமும் இராவணனிற்கு எதிர்பாராமல் வெற்றியில் முடிவு பெற்றது. எல்லாமாக நான்கு தரம் சிவபெருமான் இராவணன் முன் தோன்றி வரங்களை வழங்கினார் என்று நாரதர் புராணத்திலே கூறப்பட்டுள்ளது. சாமகானம் இப்பொழுதும் வட இந்தியாவில் இசைக்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தின் பின்னரே வெள்ளியங்கிரி என்று பெயர் கைலாயம் என்று மாறியதாகவும் (கை இல் ஆயம்= கைலாயம்) என்று நாரத புராணம் கூறுகின்றது.

(தொடரும்)

# இலங்கை பயங்கரவாதத்தை துணிச்சலுடன் எதிர்கொண்டது

## பாகிஸ்தான் ஜனாதிபதி பாராட்டு



(இஸ்லாமாபாத்)

இலங்கையும் பாகிஸ்தானும் பயங்கர வாதத்தை துணிச்சலுடன் எதிர்கொண்டது என பாக்கிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கையின் இராணுவ தளபதி மகேஸ் சேனநாயக்க பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹூசைனை சந்தித்தவேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் முன்னுதாரணமான உறவுகள் காணப்படுகின்றன என தெரிவித்துள்ள ஜனாதிபதி இலங்கையுடனான நட்புறவு குறித்து பாகிஸ்தான் பெருமையடைகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் உட்பட பல விடயங்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய உறவு காணப்படுவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

இலங்கை போன்று பாகிஸ்தானும் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலை எதிர்கொண்டது. எனினும் தேசிய ஐக்கியம் மற்றும் எங்கள் படையினரின் துணிச்சல் காரணமாக எங்களால் அதனை வெற்றிகொள்ள முடிந்துள்ளது என தெரிவித்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி இதற்காக தனது நாடு பாரிய தியாகங்களை புரிந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

அனைத்து நாடுகளுடனும் சிறந்த உறவு குறிப்பாக அயல்நாடுகளுடன் சிறந்த உறவு என்பதே பாகிஸ்தானின் வெளிவிவகார கொள்கை என தெரிவித்துள்ள ஜனாதி பதி மம்னூன் ஹூசைன் காஷ்மீர் விவகாரம் பிராந்தியம் எதிர்கொள்ளும் பாரிய சவாலாக காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 2017 பட்ஜெட் வாக்குறுதிகளில் 8 வீதம் மட்டுமே நிறைவேற்றம்

(கொழும்பு)

கடந்த 2017 ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்டத்தின் மூலமாக அரசாங்கம் முன்வைத்த வாக்குறுதிகளில் 8 வீதம் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

வரவு-செலவுத்திட்டத்தின் வாக்குறுதிகள் மற்றும் அவற்றின் யதார்த்த நிலை குறித்து சுயாதீன நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் இந்த விபரங்கள் தெரியவந்துள்ளன.

வேரிடே என்ற ஆய்வு நிறுவனம் இந்தப் பணிகளை முன்னெடுத்திருந்தது.

இதன் பிரகாரம் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மதிப்பீட்டைக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களாக வரவு-செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவற்றில் இது வரை 8 வீதத்துக்கும் குறைவான செயற்றிட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

அதிலும் 35 வீதமான செயற்றிட்டங்களே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் சாத்தியப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. (இ-7)

# மாவீரர் இல்லத்தைப் புனரமைக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## பரு. பிரதேச உறுப்பினர் பிரசாந்தன் தெரிவிப்பு

(கரணவாய்)

அபிவிருத்தியில் மட்டுமல்ல கல்வி, விளையாட்டு போன்ற துறைகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் வே.பிரசாந்தன் தெரிவித்தார்.

த.வி.கூட்டணி சார்பில் போட்டியிட்டு பருத்தித்துறை பிரதேச சபைக்கு தெரிவான அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பிரதேச சபையின் முதலாவது அமர்வில் கன்னியுரை ஆற்றிய போது மேலும் தெரிவிக்கையில்,

மக்களை நல்வழிப்படுத்துவதற்காக எங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

நாம் உடுத்தியிருக்கும் வெள்ளாடைகளைப் போன்று எமது மனங்களும் தூய்மையானதாக இருக்க வேண்டும்.

உடுத்துறை மாவீரர் இல்லம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

முன்னதாக அவர் தனது உரையினை ஆரம்பிக்கும் போது போரின் போது வீர மரணமடைந்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்தியே தனது உரையினை ஆரம்பித்தார். (இ-60)

# வவு.தமிழ் தெற்கு பிரதேச சபையின் கன்னி அமர்வும் உறுப்பினர்கள் வரவேற்பும்

(பனிக்கன்குளம்)

வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபையின் முதல் நாள் அமர்வும் உறுப்பினர்கள் வரவேற்பு நிகழ்வும் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நெளுக்குளம் முருகன் கோவிலில் இடம்பெற்ற மத வழிபாட்டுடன் ஆரம்பமானது.

உறுப்பினர்கள் ஊர்வலமாக சபையை சென்றடைந்து அமர்வு சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் தலைமையில் ஆரம்பமானது. சபையின் செயலாளர் திருமதி சுகந்தி கிஷோரின் வரவேற்புரையுடனும் மங்கள விளக்கேற்றலுடனும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிறீ தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ம.தியாகராசா, ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி, கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் நெல்சன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான செ.மயூரன், எம்.பி. நடராஜா, ஐக்கிய தேசியக்கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவரான குமார் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். விருந்தினர்கள் உரை மற்றும் உறுப்பினர்களின் அறிமுகம் முடிவடைந்ததும் சபையின் முதல் நாள் அமர்வு ஆரம்பமாகி நடைபெற்றது. (2-281)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1395

Search for people, places and things    Nagendram Home

### ஹர்சினி




### சந்தியா




### பாலன்





### சாருகேசி




### சபேஷ்




### சாருஜன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சிகரெட் கம்பனிக்கு எதிராக

# மட்டக்குளியில் சர்வமதத் தலைவர்கள் ஒன்றிணைந்து கண்டனப் பேரணி





(கொழும்பு)

கொழும்பு-மட்டக்குளிய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிகரெட் கம்பனிக்கெதிராக எதிர்ப்பு பதாதைகளை ஏந்தியவாறு இளைஞர்கள், பெண்கள் என ஆயிரக்கணக்கானோருடன் சர்வ மதத் தலைவர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட பேரணியொன்று நேற்று இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட சர்வ மதத் தலைவர்கள்,

"இலங்கையில் சிகரெட் பாவனையினால் நாளொன்றிற்கு சராசரியாக 72 பேர் உயிரிழக்கின்றனர். அதாவது வருடத்திற்கு 25000 -26000 பேர்வரை உயிரிழக்கின்றனர்.

மேலும்ஆயிரக்கணக்கான பெண்களின் கணவர்மார்களையும் பிள்ளைகளின் தந்தைகளையும்கொலை செய்யும் கொலைகார சிகரெட் கம்பனியானது தங்களது இலாபத்தில் 92 சதவீதத்திற்கு அதிகமான தொகையை பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் முதலீடு செய்கிறது.

இலங்கையர்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை பொய்களை கூறி மக்களை ஏமாற்றி சூறையாடும் சிகரெட் கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்றாகும்.

மக்களின் துயரங்களை கருத்தில் கொள்ளாது அதிக இலாபத்தை மட்டுமே நோக்காக கொண்டு செயற்படும் சிகரெட் கம்பனிக்கு எங்களின் கண்டனத்தை தெரிவிப்பதற்காகவும் இவர்களால் உயிரிழந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவுமே இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்." எனத் தெரிவித்தனர். (இ-7)

## சு.கவுக்கு புதிய அமைப்பாளர்கள்





(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா தொகுதி அமைப்பாளராக அஜித் பஸ்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், சமிந்த குமார சுதுசிங்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளதுடன், இருவரும் ஜனாதிபதியிடமிருந்து தமக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். (இ-7)

# ரஞ்சனை விசாரிக்க வேண்டும்-ஜோன் விசாரணைக்குத் தயார் -ராமநாயக்க



(கொழும்பு)

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அரசாங்கத்தில் இருந்து கொண்டு கட்சியின் தலைமைத்துவத்தை விமர்சிப்பது சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவிடம் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்:

நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய இது ஒழுக்கத்திற்கு விரோதமான செயல் எனவும் கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்களை நீக்க முயற்சிக்கும் சிலருக்கு தமது தொகுதிகளை கூட வெல்ல முடியாது போனதாகவும் அமரதுங்க விமர்சித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு கட்சியின் தலைமைத்துவத்தை விமர்சிப்பது நியாயமானதல்ல. தலைமைத்துவம் தொடர்பாக பிரச்சினைகள் இருந்தால், அதனை கட்சியின் செயற்குழுவில் தெரிவிக்க வேண்டும் எனவும் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அதேவேளை இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, எந்த விசாரணைகளுக்கும் தான் தயாராக இருப்பதாக கூறியுள்ளார். கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மதிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மினி சூறாவளியில் சேதமடைந்த வீடுகளை பார்வையிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர்

(மல்லாவி)

மாங்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் வேளை திடீரென ஏற்பட்ட இடி மின்னலுடன் கூடிய மழையினால் வீசிய மினி சூறாவளியையடுத்து வீடுகள் சேதமடைந்தன.

சேதமடைந்த வீடுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா - பிறேம்காந் ஆகிய இருவரும் சென்று சேதவிபரங்களைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நேரில்சென்று பார்வையிட்டனர். இதன் போது, முற்றாக வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்பட்ட 6, வீடுகளும் பகுதியளவில் 12 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பயன்தரும் பலா, வாழை, தென்னை மரங்களும் அழிவடைந்துள்ள நிலையில் பல குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் ஊடாக இழப்பீட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை மாங்குளம் கிராம அலுவலர் மேற்கொண்டு வருகின்றார். (2-15)



## எதிர்கால அரசியல் நடவடிக்கை குறித்து சு.க. அதிருப்தி குழு மகிந்தவுடன் சந்திப்பு

# நேரம் ஒதுக்கித்தர எழுத்து மூலம் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியாக செயற்படத் தீர்மானித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேரும் இவ்வாரத்துக்குள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இதற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு மகிந்தவிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் சம்பந்தமாகவே இதன் போது கலந்துரையாடப்படும் என்றும் சு.க. உறுப்பினரொருவர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சு.க. உறுப்பினர்கள் 16 பேரும் கூட்டரசில் தாம் வகித்த பதவிகளைத் துறந்துள்ளனர்.

ஒருவரைத் தவிர ஏனையோர் அமைச்சு, இராஜாங்க, பிரதி அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டரசிலிருந்துகொண்டு பிரதமரை எதிர்த்த இவர்களிடமிருந்து அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் வலியுறுத்தியதுடன், அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் முன்வைத்தனர்.

இதனால், தேசிய அரசுக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 15 பேரின் பதவி துறப்பும் இடம்பெற்றது.

இதையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த சு.க. அணி இரண்டாகப் பிளவுபட்டது. அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தலைமையில் 16 பேரும் கொழும்பில் முக்கிய சந்திப்புகளை நடத்தினர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் பொதுச் செயலாளர் பதவிகளில் மாற்றம் அவசியம் எனவும் வலியுறுத்தினர்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சு.கவின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி கட்சிக்குள் மறுசீரமைப்பு செய்வதற்கு ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டியுள்ளார். இதற்கு எஸ்.பி. அணி ஆதரவு தெரிவித்தாலும் கூட்டரசில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க முடியாது எனவும் எடுத்துரைத்துள்ளது.

அத்துடன், சு.கவை விட்டு வெளியேறப் போவதில்லை எனவும் அந்த அணி கூறியுள்ளது. எனவே, எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 16 பேரும் நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியாகச் செயற்படவுள்ளனர்.

தேவையான சந்தர்ப்பங்களில் மகிந்த அணியான பொது எதிரணிக்கு ஆதரவை வழங்க அவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இந்த முடிவை மகிந்தவுக்கு அறிவிப்பதற்காகவும், அடுத்த கட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்காகவுமே மேற்படி சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# இனவாதத்தைத் தூண்ட வேண்டாம்

## தமிழர்களை நோக்கி முஸ்லிம் எம்.பி. அறிக்கை

(திருமலை)

"இந்து பாடசாலை இந்துக்களுக்கே" என எழுதி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு "பௌத்த நாடு பௌத்தர்களுக்கே" என கூறியதால்தான் முப்பது வருட யுத்தம் நடைபெற்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் மிகுந்த மனவேதனை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாடசாலைக்குள் பாடசாலை அதிபரின் அனுமதி இன்றி நுழைந்து பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்கு யார் குழப்பம் விளைவித்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்துமில்லை.

பாடசாலையில் அக்கறை கொண்ட பெற்றோர் என்ற ரீதியில் இந்த நடவடிக்கையை கண்டித்து கவனஈர்ப்பு போராட்டம் நடத்துவதிலும் தவறில்லை.

ஆனாலும் சண்முகா இந்து கல்லூரியில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டம் அதன் நோக்கங்களை தாண்டி இனவாதத்தைத் தூண்டுவதாகவே அமைந்தது வருத்தமளிக்கிறது.

அந்த பாடசாலையில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்கள் அணியும் ஆடை விடயத்தில் ஏதாவது பிரச்சினை காணப்படின் அதை கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் பேசி சுமுக தீர்வொன்றைகண்டிருக்கலாம். ஆனால் இந்த பிரச்சினையை இந்த அளவு பூதாகரமாக்கிய பாடசாலை நிர்வாகம், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

ஆடை அணியும் சுதந்திரம் தனிமனித உரிமை சார்ந்தது. முஸ்லிம் பாடசாலைகளில் பல தமிழ் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இதுவரை அந்த ஆசிரியர்களை முஸ்லிம் கலாசார ஆடைகளை அணியுமாறு பாடசாலை நிர்வாகம் கூறியதாக நான் அறியவில்லை. அத்துடன் தமிழ் பாடசாலைகளில் தமிழ் கலாசார ஆடைகள் அணிய வேண்டுமாயின் ஆசிரியர்கள் காற்சட்டை அணியாமல் வேட்டி, சட்டை அணிந்துவருமாறும் யாரும் கூறியதில்லை.

நடைபெற்ற கவனஈர்ப்பு போராட்டத்தில் "இந்து பாடசாலை இந்துக்களுக்கே" என எழுதி இருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாறு "பௌத்த நாடு பௌத்தர்களுக்கே" என கூறியதால்தான் முப்பது வருட யுத்தம் நடைபெற்றது என்பதை பதாகையை ஏந்தியவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அன்று சிங்கள மக்கள் தமிழர்களுக்கு செய்ததுக்கும் பதாகையை ஏந்தியவர்கள் சொல்ல வருவதற்கும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை.


நாடு முழுவதிலும் பல முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்களும் தமிழ் மாணவர்களும் தமிழ் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வி கற்பதை நாம் உணர்ந்து அவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் இந்த பிரச்சினைக்குசுமுகதீர்வுஒன்றை நாம் காண வேண்டும்.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடியுள்ளேன். இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வை எதிர்வரும் நாட்களில் அனைத்து தரப்போடும் கலந்துரையாடி பெறமுடியும் என நான் நம்புகிறேன்.

அதுவரை இனவாதத்தை தூண்டுவோர் பதவிகளில் இருந்து விலகி இன ஒற்றுமையை சீர்குலைக்கா வண்ணம் செயற்படுமாறு இருதரப்பினருக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# தலைநகரில் சோரம்போகாத தமிழர் தலைமைத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்

இலங்கைத் தமிழர் வாழ்வியல் வரலாற்றில் பெரும்பான்மை சிங்களவர்களால் தமிழினம் காலத்துக்குகாலம் நசுக்கப்பட்ட இனமாகவும் இல்லையேல் அழித்தொழிக்க முற்பட்ட ஒரு இனமாகவும் இருந்து வந்தது வரலாறு. இந்த வரலாறு பாதையில் தமிழரின் இன்னலுக்கு தலைநகரில் இருந்து குரல் கொடுத்த ஒரே தனித்துவமான தலைவனாக ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் இருந்து வந்தது கண்கூடு. தமிழர்களில் உச்ச அழிவுக்குப் பின்னரான விடுதலைப்புலிகளுடனான போர் மௌனித்த பின்னரான இன்றைய இந்தக்காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளின் கவனமும் இலங்கைப் பக்கம் திரும்பியுள்ள இந்தநேரத்தில் தலைநகரில் சோரம் போகாத தனித் தமிழ் தலைவனான மனோகணேசன் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டிய முக்கிய காலகட்டம் இதுவாகும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்தார்.



பெரும்பான்மை கட்சிகள் தாமே தமிழ் இனத்தின் பாதுகாவலன். தமிழினத்தின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றுவதாக பசப்பு வார்த்தைகள் வீசி மக்களை திசை திருப்ப முயலும் இவ் வேளையில் எமது ஜனநாயக மக்கள் முன்னணி வடக்கு,கிழக்கு, மலையகம் என தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் உரத்து குரல் கொடுக்கின்ற அதே வேளை சகோதர இனத்தின் இன்னல்களுக்காகவும் குரல் கொடுக்க என்றும் பின்னின்றதில்லை என்ற காரணத்தினால் சகோதர இனத்தவரையும் அரவணைத்துக்கொண்டு பெரும்பான்மை கட்சியுடன் இணைந்திருந்தாலும் கூட எமது தனித்துவத்தை என்றும் விட்டுக் கொடுக்காமல் பெருங் கட்சிகளை விமர்சிக்க வேண்டிய இடத்தில் விமர்சித்துக் கொண்டு எமது தனித்துவத்தை விட்டுக்கொடுக்காமலும் சுய உரிமைகளை நிலைநிறுத்திக் கொண்டு எமது கட்சிப் பயணம் வெற்றி நடை போடுவதை பெரும்பான்மை கட்சிகளால் ஜீரணிக்க முடியாமல் எமது கட்சி அழித்தொழிக்க இலக்கு வைக்கப்பட்டிருப்பது கண்கூடு. இந்த இக்காலகட்டத்தில் தமிழர்களாகிய நாம் தனித்துவமான எமது கட்சியின் இருப்பை பலவீனப்படுத்தவிட்டுவிடலாகாது. மேலும் பதவிப் பிரச்சினைகளும் கருத்தை இடித்துரைத்த கருத்துப் பதிவுகளும் கருத்துப் பரிமாற்றங்களும் மாற்றமடையக் கூடியவை. நியாயம் நிலைநிறுத்தப் படக்கூடியவை. அறையில் கூடிப்பேசி தீர்க்க வேண்டியவையே அன்றி தெருவில் பேசப்படபட்டு பிரச்சினைகள் ஆக்கப்படுபவைகள் அல்ல. இவை ஒரு இனத்தின் இருப்பைநோக்கி சிந்தித்துப் பயணிக்கின்ற தலைமையில் வழிவந்தவர்களுக்கு ஏற்புடையதல்ல. மேலும் இக்காலகட்டத்தில் தமிழர்களாகிய நாம் எமக்குள் உள்ள பிறழ்வுகளை புறந்தள்ளி வடக்கு, கிழக்கு, மலையக தமிழர்களின் உரிமைகள் உரத்து பேசப்பட்டு விடிவை நோக்கி பயணிக்கும் இக்காலத்தில் பெரும்பான்மைக் கட்சிகளின் விருப்பான எமது கட்சியை பலவீனப்படுத்தும் முயற்சிகளுக்கு துணை போகாமல் இருப்பது அவசியமாகும் என பாஸ்கரா மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# 5 வருட திட்ட நிறைவு குறித்து அறிவிப்பு






(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையமானது USAID நிறுவனத்தின் நிதியனுசரணையில் அமுலாக்கம் செய்து கொண்டிருக்கின்ற 5வருட திட்டத்தினை நிறைவுக்கு கொண்டுவருவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நிகழ்வு கடந்த 24ஆம் திகதி யாழ். சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதமவிருந்தினராக USAID நிறுவனத்தின் அரசு மற்றும் நலிவுற்ற மக்களுக்கான காரியாலய பிரதி அலுவலக பணிப்பாளர் அலென்டான்சி பங்கெடுத்ததுடன் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார். குறித்த இத்திட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் 9 பிரதேச செயலகங்களுடனும் (தெல்லிப்பழை, கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, அம்பன், கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி, முசலி) 61 கிராமசேவகர் பிரிவுகளிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கம் செய்யப்பட்டு வந்தமையால் தொடர்ந்து பயணித்த பிரதேச செயலர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், அரச சார் பற்ற நிறுவனங்களுக்கான மாவட்ட இணைப்பாளர், மீன்பிடி மற்றும் நீரியல் திணைக்கள பணிப்பாளர்கள், மீன்பிடி கண்காணிப்பு உத்தியோகத்தர்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.



இந்நிகழ்வில், தனிப்பட்ட உதவித்திட்டம் வழங்கப்பட்ட 1000 பயனாளிகளில் 7 பேருக்கான இறுதிக்கட்ட பொருட்கள் அவர்களது முயற்சியாண்மை திட்டத்திற்காக வழங்கப்பட்டது. இத்திட்டமானது திராட்சை, முந்திரிகை, கொடித்தோடை, பப்பாசி, மரக்கறி பயிர்ச்செய்கை, மீன்பிடி உபகரணங்கள், முயற்சியாண்மை உதவிகள், ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை பயிற்சி மற்றும் வேலை, மீன் விற்பனை ஏலக்கூடம், மீனவர் ஓய்வு மண்டபம், பலநோக்கு மண்டபம், அரைநிரந்தர வீடுகள், மலசலகூடம் ஆகியன அமைத்தல் மற்றும் விவசாய கிணறுகள் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு என விரிவடைந்து காணப்பட்டது. திட்ட நிறைவுக்கான உத்தியோகபூர்வ அறிவித்தலானது யாழ்.சமூக செயற்பட்டு மையத்தின் இணைப்பாளரினால் அறிவிக்கப்பட்டதுடன், நிறுவனத்துடன் தொடர்ந்து அயராது பணிபுரிந்த அரச திணைக் களங்கள் கௌரவிக்கப்பட்டது. அந்த வகையில் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேசசெயலகங்களுக்கு விருது வழங்கப்பட்டன. மேலும், மீளக்குடியமர்ந்த மக்களின் நலிவுற்ற நிலையை அறிந்து 254 மில்லியன் பெறுமதியான திட்டத்தினை, எமது நிறுவனத்திற்கு கொடுத்து 10000 தனிநபர்கள் பாதுகாப்பானதும் வாழ்வாதாரத்தினை பெற்ற நிலையிலும் காணப்படுவதற்கு உறுதுணையாக இருந்த USAID நிறுவனத்தினையும் யாழ்.சமூக செயற்பாட்டு மையம் கௌரவித்திருந்தது.

மேலும் பிரதம விருந்தினர் எம்மால் தெல்லிப்பழை பிரதேசத்தில் வழங்கப்பட்ட உதவித்திட்டங்களை சென்று பார்வையிட்டிருந்தார். அவர் பளை வீமன்காமம் வடக்கு, தையிட்டி, பலாலி கிழக்கு, வசாவிளான் கிழக்கு பிரதேசங்களில் புனரமைக்கப்பட்டு விவசாய கிணறுகள் மற்றும் கால்வாய்கள், முயற்சியாண்மை திட்ட உதவிகள், திராட்சை பயிர்ச்செய்கை, தூவல் நீர்ப்பாசனதிட்டங்கள் என்பவற்றினை பார்வையிட்டிருந்தார். (இ-7)

# ரவி கருணாநாயக்கவுக்கு மைக்கல் பெரேரா எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவராக நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இருந்து வெளி நடப்பு செய்துள்ளார்.


தான் ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும், அவரின் நியமனத்திற்கு எதிராக போராடுவதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் சிறிகொத்தவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு இராஜினாமா அறிவிப்பை விடுத்தார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## எலிக்கு வைத்த பொறி



ஒரு பண்ணையார் வீட்டில் ஒரு எலி வசித்து வந்தது. ஒரு நாள் தனது இரவு நேர இரை தேடப் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

எலிவலையைவிட்டுதலையை உயர்த்திப் பார்த்தது. வீட்டின் எஜமானனும், எஜமானியும் ஒரு பார்சலைப் பிரித்துக் கொண்டிருந் தார்கள். ஏதோ நாம் சாப்பிடக்கூ டிய ஒரு பொருள் தான் உள்ளே இருக்கும் என்று ஆவலோடு பார்த்தது எலி.

அவர்கள் வெளியே எடுத்தது ஒரு எலிப்பொறி. அதைப் பார்த் ததும் அந்த எலிக்கு மூச்சே நின்று விடும் போல இருந்தது... உடனே ஒரே ஓட்டமாக வீட்டில் இருந்த கோழியிடம் போய் சொன்னது.

"பண்ணையார் ஒரு எலிப் பொறி வாங்கி வந்துள்ளார். என க்கு பயமாக இருக்கிறது என்றது" இதைக் கேட்ட கோழி விட்டேற் றியாகச் சொன்னது.." உன்னைப் பொறுத்தவரை இது கவலைப்பட வேண்டிய விடயம்தான். நல்ல வேளையாய் இந்த எலிப்பொறி யால் எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்றது கோழி"

உடனே அது ... பக்கத்தில் இருந்த வான்கோழியிடம் சென்று.. அதே விடயத்தைப் போய்ச் சொல் லியது. வான்கோழியும் அதேபதி லைச் சொல்லியதோடு, "நான் எலிப் பொறியயெல்லாம் பார்த்து பயப்பட மாட்டேன்..." என்றது.

மனம் நொந்த எலி... அடுத் தாக... பக்கத்தில் இருந்த ஆட்டிடம் போய் அதே விடயத்தைச் சொல் லியது... ஆடும் அதே பதிலைச் சொல்லியது. அத்தோடு நின்றி ருந்தாலும் பரவாயில்லை...

"எலிப்பொறியை பார்த்து, என் னையும் பயப்படச் சொல்கிறாயா?" என்று நக்கலும் அடித்தது. அன்று இரவு எலிப்பொறியில் ஒரு பொரித்த மீன் துண்டை வைத்து விட்டு... பண்ணையாரும் அவர்மனைவியும் தூங்கப் போயினர்.

ஒரு அரை மணி நேரத்தில்,, "டமால்" என்றொரு சத்தம். எலி தான் மாட்டிக் கொண்டு விட்டது என்று எண்ணிய பண்ணையார் மனைவி ஓடிவந்து. எலிப்பொறி யைத் கையில் தூக்கினாள்.

ஆனால்... எலிக்கு பதிலாக பாதி மாட்டியிருந்த பாம்பு ஒன்று எஜமானியம்மாளைக் கடித்து விட்டது. எஜமானியம்மாளை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

விஷத்தை முறிக்க ஊசி போட்ட பின்னும்.. பண்ணையார் மனை விக்கு ஜுரம் இறங்கவேயில்லை. அருகில் இருந்த் ஒரு மூதாட்டி... "பாம்புக் கடிக்குப் பின்னால் வரும் காய்ச்சலுக்கு.. சிக்கன் சூப் வைத் துக் கொடுத்தால் நல்லது.." என்று யோசனை சொன்னாள்.

கோழிக்கு வந்தது வினை. கோழி அடித்து சூப் வைக்கப் பட்டது. கோழி உயிரை விட்டது. அப்போதும் பண்ணையார் மனை வியின் ஜுரம் தணியவில்லை. உறவினர்கள் சிலர் நலன் விசா ரிக்க வந்தார்கள்.

அவர்களுக்குச் சமைத்துப் போட வான்கோழியை அடித் தார்கள். வான்கோழியும் உயிரை விட்டது. சில நாட்களில் பண் ணையாரம்மாவின் உடல் நலம் தேறியது. பண்ணையார் தன் மனைவி பிழைத்ததைக் கொண் டாட ஊருக்கே விருந்து வைத்தார்.

இந்த முறை ஆட்டின் முறை. விருந்தாக ஆடும் உயிரை விட் டது. நடந்த அத்தனை நிகழ்வு களையும் எலி வருத்தத்தோடு கவனித்துக் கொண்டிருந்தது.

பண்ணையார் மனைவியின் பாம்புக்கடிக்குக் காரணமான எலிப் பொறியைத் தூக்கிப் பர ணில் போட்டு விட்டார். "எலி தப்பித்து விட்டது.

அப்பாடா...

நீதி: அருகில் இருப்பவர்கள் தனக்கொரு பிரச்சினை என்று வந்தால் என்ன..? என்றாவது கேளுங்கள். ஏனென்றால் யாருக்கு என்ன பிரச்சினை எப்போது வரும் என்று யாருக்கும் தெரி யாது. அடுத்தது அந்தப் பிரச் சினை நமக்கும் வரலாம்.

04.2018 27

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1124-முதலாம் டேவிட் ஸ்கொட்லாந்து மன்ன னானான்.
- 1296-இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னன் டன்பார் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் ஸ்கொட்லாந்தரைத் தோற் கடித்தான்.
- 1521- நாடுகாண் பயணி பேர்டினண்ட் மகலன் பிலிப்பைன்சில் பழங்குடியினரால் கொல் லப்பட்டார்.
- 1522-மிலான் நகரைக் கைப்பற்ற இடம்பெற்ற போரில் பிரெஞ்சு மற்றும் சுவிட்சர்லாந்துப் படையினரை ஸ்பானியப் படையினர் தோற்கடித்தனர்.
- 1565-பிலிப்பைன்சின் முதலாவது ஸ்பானியக் குடியேற்ற நாடு சேபு(Cebu) அமைக் கப்பட்டது.
- 1840-லண்டனில் புதிய வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் அடிக்கல் நாட்டப்பட்டது.
- 1904-அவுஸ்திரேலியாவின் முதலாவது தேசிய அரசை அவுஸ்திரேலியத் தொழிற் கட்சி அமைத்தது.
- 1945-இரண்டாம் உலகப் போர்: கடைசி நாசி ஜேர்மன் படைகள் பின்லாந்தில் இருந்து வெளியேறினர்.
- 1960-பிரெஞ்சு நிர்வாகத்தின் கீழ் ஐ.நாவின் நேரடி ஆட்சியின் கீழிருந்த டோகோ விடுதலை அடைந்தது.
- 1978-இராணுவப் புரட்சியை அடுத்து ஆப் கானிஸ்தான் மக்கள் சனநாயகக் கட்சி ஆப்கானித்தானின் ஆட்சியைக் கைப் பற்றியதுடன் ஆப்கானித்தானில் போர் தொடங்கியது.
- 1981-Xerox PARC முதன் முறையாக கணனி mouse ஐ அறிமுகப்படுத்தியது.
- 1994-தென்னாபிரிக்காவில் முதற்தடவையாக கறுப்பினத்தவரும் வாக்களித்த மக்க ளாட்சி முறையிலான தேர்தல் இடம் பெற்றது.
- 2001-தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை (ஹீனி கல) விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. 600இற்கும் மேற் பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1723-பிலிப்பு தெ மெல்லோ, கொழும்பில் பிறந்த கிறித்தவத் தமிழறிஞர் (இ. 1790)
- 1878-மரிய குவாதலூபே கார்சிய சவாலா, மெக்சிக்கோ கத்தோலிக்கப் புனிதர்(இ. 1963)
- 1902-கந்த முருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (இ.1965)
- 1941-அலெக்சாண்டர் துபியான்சுகி, உருசியத் தமிழ்ப் பேராசிரியர், தமிழறிஞர்
- 1945-பிரபஞ்சன், தமிழக எழுத்தாளர், விமர் சகர்

### இறப்புகள்

- 1521-பேர்டினென்ட் மகலன், போர்த்துக்கீச மாலுமி, நாடுகாண் பயணி (பி. 1480)
- 1969-என். ஆர். தியாகராஜன், தமிழக அரசி யல்வாதி, விடுதலைப் போராட்ட செயற் பாட்டாளர் (பி. 1913)
- 1984-எம்.டி.இராமநாதன், கேரளக் கர்நாடக இசைப்பாடகர் (பி. 1923)
- 2015-க. அருணாசலம், ஈழத்து தமிழறிஞர், பேராசிரியர் (பி. 1946)

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (தென்னாபிரிக்கா)
- விடுதலை நாள் (டோகோ, 1960)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 | 50 | 45 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 58 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 40 | 50 | 40 | 80 | 30 |
| தக்காளி | 30 | 40 | 20 | 30 | 15 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 | 50 | 25 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 30 | 50 | 25 | 50 | 80 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 80 | 160 | 70 |
| பூசணி | 40 | 20 | 50 | 40 | 15 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 60 | 70 | 20 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 50 | 30 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 200 | 130 | 150 | 180 | 150 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 70 | 60 | 45 | 60 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 100 | 100 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 50 | 40 | 160 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | 40 | 60 | 50 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 70 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 200 | 200 | 160 | 200 | 170 | 200 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 30 | 40 | 15 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 60 | 20 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 250 | 250 | 180 | 200 | 400 |
| போஞ்சி | 150 | 200 | 100 | 100 | — | 200 | 100 |
| கத்தரிதம்புள்ளா | 40 | 20 | 40 | - | — | 50 | 60 |
| கீரை-1பிடி | 30 | 20 | 30 | 50 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 150 | 280 | 180 | 200 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 75 | 35-55 | 60-75 | 80 |
| இராசவள்ளி | 180 | 200 | — | 120 | 140 | 160 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | - | — | — | — |
| முள்ளங்கி | 40 | — | 40 | - | 20 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | — | 30 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | — | — | 20 | 20 | 10 | 20 | 30 |
| சரப்பலா | — | — | — | - | — | 80 | — |

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், அன்னயாவினும் புண்ணியம்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

*- மகாகவி பாரதியார்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கல்வி கற்பதற்கு வழி சொல்லிக் கொடுங்கள்

உடனடியாக வருமானம் கிடைக்க வேண்டுமாயின் மீன்பிடிக்க வேண்டும். மூன்று மாதங்களின் பின் வருமானம் கிடைக்க வேண்டுமாயின் நெல் விதைக்க வேண்டும். நூறு வருடங்களின் பின்னர் வருமானம் பெற வேண்டுமாயின் பனை வைக்க வேண்டும். ஒரு சந்ததிக்குப்பின் நன்மை பெறவேண்டுமாயின் கல்வி கற்பிக்க வேண்டும் என்பது சீனப் பழமொழி.

கல்வி என்பது கற்றவரை மட்டுமன்றி மற்றவர்யும் வாழ வைக்கும்.

எனவே மனித சமூகத்தின் எழுச்சியும் உயர்ச்சியும் கல்வியில்தான் தங்கியுள்ளது.

இன்று எங்கள் மத்தியில் பலரையும் பார்க்கின்றோம். இதில் ஒரு தரப்பினர் உழைக்கின்ற வருமானத்தில் பெரும் பகுதியை மதுவுக்காக செலவிடுகின்றனர்.

இதனால் அந்தக் குடும்பங்கள் வறுமையில் வாடுவதை அவதானிக்க முடிகின்றது.

அதிலும் குறிப்பாக இத்தகைய குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் வறுமை நிலையில் இருப்பதுடன் பாடசாலைகளுக்குச் செல்கின்றபோது, சீருடைகளைக்கூட தூய்மையாக அணிய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

தந்தை மதுபோதைக்கு அடிமையாக, வீட்டில் நிலவும் வறுமையைப் போக்குவதற்காக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திவிட்டு கூலித்தொழிலுக்குப் பிள்ளைகள் செல்கின்ற பரிதாபம் ஏற்படுகின்றது.

இவ்வாறு வீட்டின் வறுமைக்குத் தீர்வு காண்பதற்காக கூலித் தொழிலுக்குச் சென்ற பிள்ளைகள் பிழையான கூட்டத்துடன் பழகி அவர்களும் மதுப்பழக்கத்துக்கு ஆளாகுவதுடன் பெறுமதிமிக்க மோட்டார் சைக்கிள்களை கடன் அடிப்படையில் பெற்று வேகக்கட்டுப்பாடின்றி மோட்டார் சைக்கிளை ஓடி எல்லாவற்றையும் நிர்மூலமாக்குகின்ற ஒரு சூழ்நிலைக்கு வந்துவிடுகின்றனர். இத்தகைய அவலம் தீர வேண்டும்.

பொறுப்பான பிள்ளைகள் தங்கள் குடும்ப கஷ்டத்தை உணர்ந்து அர்ப்பணிப்புடன் உழைக்கின்றனராயினும் தவறான பழக்கவழக்கமுடைய கூட்டத்தின் பிடியில் இருந்து இவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதென்பது கடினமாகவே உள்ளது.

எனவே கல்வி ஒன்றினூடாகவே எமது சமூகத்தில் இருக்கக்கூடிய பிழையான பழக்க வழக்கங்களை நீக்க முடியும்.

அந்தவகையில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் க.பொ.த உயர்தரத்தில் கற்பதற்கான ஒரு சந்தர்ப்பம் இப்போது அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு 2017ஆம் ஆண்டுகளில் க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றி சித்தியடைய முடியாமல்போன மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் கற்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தகவலை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்குத் தெரியப்படுத்துவதை மக்கள் சமூகம் ஒரு அறக்கடமையாகச் செய்து மாணவர்களின் உயர்கல்விக்கு உதவி செய்தால் அது பெரும் புண்ணியமாகும்.

## முல்லையில் பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வுகள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி தேர்வு இன்றும் இடம்பெறவுள்ளது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 319 பட்டதாரிகள் இந்த நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கமைய நேற்று முன்தினம் 105 பேரும் நேற்று 105 பேரும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்த னர்.

ஏனையவர்களுக்கு இன்று நேர்முகத்தேர்வு இடம்பெறவுள்ளது. (2-281)

## தொழிலாளர் தினம்

யாழ். தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில தொழிலாளர் தினம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கல்வியங்காடு சட்டநாதர் ஆலய முன்றலில் பிற்பகல் 3 மணியளவில் ஒன்றுகூடலுடன் ஆரம்பமாகி ஊர்வலமாக சென்று கிட்டுப் பூங்காவில் பொதுக்கூட்டத்துடன் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

பேருவளை பிரதேசத்தில நேற்றுக் காலை எரிந்த நிலையில் சடலம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

46 வயதான மொஹமட் சாஹின் என்ற நபரே இவ்வாறு எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பேருவளை சஞ்ஞானந்த மாவத்தை மஸ்ஸல பிரதேசத்தில் இரண்டு மாடி கட்டடம் ஒன்றில் அறைக்குள் இந்த சடலம் காணப்பட்டுள்ளது. (ம)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### கொண்டாட்டமும் கிறிஸ்துமஸ் மரமும்

உடல் (பொருள்) மற்றும் ஆன்மா (உணர்வு) இவற்றின் கூட்டே மனித வாழ்க்கையாகும். இல்லையா?

நீங்கள் பொருள் என்பதை மறந்து நுண்ணுணர்வுதான் மகிழ்ச்சி.

சிற்றின்ப உணர்ச்சிகள்கூட நுண் அதிர்வுகளைக் கணநேரமே உணரச் செய்கிறது. அவ்விதமாகத்தான் அவை கணநேர மகிழ்ச்சியைத் தருகின்றன. ஆனால் அந்த மகிழ்ச்சி குறுகிய நேரமே. பிறகு அது உங்களை பிணைப்புக்குள்ளாக்கி விடுகிறது.

சத்சங்கத்திலிருந்து கிடைக்கும் இன்பம் உயர்வான இயல்புடையது. மந்திரங்கள் மற்றும் பாடல் ஆத்மாவில் அதிர்வுகளை உண்டாக்குகின்றன. அதனால்தான் நங்கள பாடுமபோது ஆனநத நணடநேரம நிலைதிருக்கிறது.

தூல உடலிலிருந்து கிடைக்கும் இன்பம் குறுகிய காலததறகு உளளது. களைபபையும பிணைபபையும உடையது.ஆழ்ந்த சூட்சும மட்டத்திலிருந்து கிடைக்கும் இன்பம் நீண்ட நேரம் நீடித்திருப்பதோடு ஆற்றல், புத்துயிர் அளிக்கிறது. இது கட்டுப்படுத்துவதில்லை.

நீங்கள் மின்சாரம் (உணர்வு/ ஆற்றல்) என்று அறியும் போது அடக்க முடியா ஆவல், பேராசை, காமம் மற்றும் கோபம் இருந்த இடம் தெரியாது மறைந்து விடுகின்றன. அபபோது நஙகள உணமையான ஒரு கொணடாடடமே.

கிறிஸ்துமஸ் செய்தி:

எலலாபபககஙகளிலும கிளைகளோடு மேல நோககி இருககும கறிஸதுமஸ மரம நஙகள. ஆணடின அநதப பருவத்தில் எல்லா மரங்களும் இலையற்று இருக்கும் போது நீங்கள் பல பரிசுகளைக் கொடுக்கப் பசுமையாக உள்ளீர்கள்.

நீங்கள் பரிசுகளையும் ஒளியையும் தாங்கி நிற்கிறீர்கள். உங்களுக்காக அல்ல. ஆனால் மற்றவர்களுக்காக உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் பெற்றுள்ள பரிசுகள் எல்லாமே மற்றவர்களுக்காக என்பதை நினைவில் கொள்ளுங்கள். யார் உங்களிடம் வருகிறார்களோ அவர்களுக்கு பரிசுகளைக் கொடுங்கள்.

ஸ்ரீஸ்ரீயின இருககையைச சுறறிலும ஏராளமான பரிசுகள் இருந்தன. " நீங்கள் இந்தப் பரிசுகளைத் திறக்கப் போகிறீர்களா? என்று ஜான் கேட்டான். ஸ்ரீஸ்ரீ கண்களைச் சிமிட்டியவாறே மககளைச சுடடிககாடடி "நான எபபோதுமபரிசுகளைத் திறக்கிறேன்" என்று பதில் சொன்னார்.

உங்கள் வாழ்வே ஒரு பரிசு. இந்தப் பரிசைப் பிரிக்கத்தான் நீங்கள் வந்துள்ளீர்கள். பிரிக்கும்போது பரிசு சுற்றப்பட்டுள்ள மேலுறைகளையும் கூடப் பாழாகாமல் பாதுகாக்க வேண்டும் என்று நினைவில் கொள்ளவும் உஙகளுடைய முழு சுறறுசசூழல, சூழநிலைகள மறறும உடல் இவைதான் சுற்றப்பட்டுள்ள மேலுறைகள்.

பரிசைப் பிரிக்கும்போது நாம் பல சமயங்களில் அம்மேலுறைகளைக் கிழித்து விடுகிறோம். சில சமயத்தில் பரிசுகளைக் கூட பாழ்படுத்தும் அளவு அவசரப்படுகிறோம். பொறுமையுடன், சகிப்புத் தன்மையுடன் உங்களுடைய பரிசுகளைத் திறக்கவும். மேலுறைகளைப் பாதுகாக்கவும்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

குருநகரிலுள்ள ஜே/68, ஜே/69, ஜே/70, ஜே/71, ஜே/72 ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் குருநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (இ-106)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில அராலி பிரதேசத்திலும் கிளிநொச்சி பிரதேசத்தில உன்னாப்பிலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு வண்ணாங்குளம், வட்டுவாகல், தேராவில், இருட்டு மடு, மூங்கிலாறு, உடையார் கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம், 68 ஆவது பிரிவு இராணுவ முகாம், 683 ஆவது பிரிவு இராணுவ முகாம், 18 VIR இராணுவ முகாம், கூல்மென் ஸைஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நேரியகுளம், சின்னகுளம், அழகாபுரி, துட்டவாகை, இலுப்பைக்குளம், தந்திரமலைவீதி, சின்னசிப்பிக்குளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகந்தான்குளம், 1ஆம், 2ஆம் பார்ம், கிறிஸ்தவபுரம், கதிர்காம நகர், சூநடநைக கிராமம்,மெனிக்பாம், அறிவிதோட்டம், உடல்நல மையம், ஆண்டியப்புளியங்குளம், மீடியா பாம், பெரியமடு, ஆண்டியாப்புளியங்குளம் இராணுவ முகாம், இராணுவப் பயிற்சிப்பாடசாலை, கஜபுர, இராணுவ முகாம், 2ஆவது Meeh இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற் படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம், செம் மண்தீவு நெறகளஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தானங்கள் கொடுப்பதால் கிடைக்கும் பலன்கள்?

புண்ணிய காலங்களில் செய்யப்படும் தானங்களை சாதாரண காலங்களில் கிடைப்பதைவிட பனமடங்கு புணணியம உணடு எனகினறாரகள சிததரகள.

கழே குறிபபிடபபடடுளள தானஙகளின பயனகளை நாமும் தெரிந்து கொள்ளுவோம்.

அரிசியை தானம் தர பாவங்கள் தொலையும்
வெள்ளியை தானம் தர மனக்கவலை மறையும்
தங்கம் தானம் தர தோஷம் விலகும்
பழங்களைத் தானம் தர புத்தி, சித்தி கிட்டும்
தயிர் தானம் தர இந்திரிய விருத்தியாகும்
நெய் தானம் தர நோயைப் போக்கும்
பால் தானம் தர துக்கநிலை மாறும்
தேன் தானம் தர பிள்ளைப்பேறு கிட்டும்
நெல்லிக்கனி தானம் தர ஞானம் உண்டாகும்
தேங்காய்தானம்தர நினைத்த காரியம்வெற்றி அடையும்
தீபங்களை தானம் தர கண்பார்வை தெளிவாகும்
கோ (மாடு) தானம் தர ரிஷி, வேத, பிதிர்கடன் விலகும்
பூமியை தானம் தர பிரம்மலோக தரிசனமும்
ஈஸவரலோக தரிசனமும கிடடும
ஆடையை தானம் தர ஆயுள் விருத்தியாகும்
அனனததை தானம தர தரிததிரமும கடனும தருப

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நற்செயல்களைச் செய்யுங்கள்

- பிரார்த்தனையைத் தவிர வேறு எந்த செயலாலும் விதியை மாற்றிக் கொள்ள முடியாது. நற்செயல்களைத் தவிர எநதச செயலாலும ஆயுளை நடிககச செயய முடியாது.
- எவர் ஒருவர் துன்பத்திற்கு ஆளானவரை நெருங்கி ஆறுதல் மனமிரங்கி கூறுகிறாரோ, அவருக்கு துன்பத்திற்கு ஆளானவருடைய நன்மைக்குச் சமமான நன்மை கிடைக்கும்.
- வெட்கம நனமைகளை இழுதது வரும. உனககு வெட்கம இலலையாயின உனது இஷடம போல நடநது கொள.
- இறைவனிடத்தில் சிறந்தவர் யார் என்றால், தன்னுடைய நண்பர்களிடம் நல்லவராக நடப்பவரே!
- உங்களுக்குள் அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ளுங்கள். ஏனெனறால அனபளிபபுகளைக கொடுபபது மனதிலுள்ள பொறாமைகளை அழித்து விடுகின்றது.
- கெட்டவர்களுடன் தோழமை கொள்ளாதே. ஏனென்றால் அவர்களுடன் தோழமை கொண்டால் அவர்களின கணக்கில் உன்னையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் கால் இறுதிக்குள் 8 அணிகள்





கே.சி.சி. வெள்ளிவிழா தொடரில் (Silver Jubliee) 8 அணிகள் கால் இறுதிக்கு தகுதி பெற்றன.

திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 2ஆவது சுற்றில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை வெற்றிகொண்டு முதலாவது கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

விக்டோறி அணி முதலாவது சுற்றில் அரியாலை சென்றல் அணியையும், 2 ஆவது சுற்றில் பற்றீசியன்ஸ் அணியையும்வெற்றிகொண்டு முதலாவது கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. யாழ்.பல்கலைக்கழக அணி 2ஆவது சுற்றில்யூனியன்ஸ்அணியை வெற்றி கொண்டு 2ஆவது கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

சென்றலைட்ஸ் அணி 2 ஆவது சுற்றில் ஸ்கந்தா ஸ்ரார் அணியை வெற்றி கொண்டு 2 ஆவது கால் இறுதிக்கு தகுதி பெற்றது.

நியூஸ்ரார் அணி முதலாவது சுற்றில் டிறிபேக்ஸ்ரார் அணியையும், 2 ஆவது சுற்றில் கே.சி.சி. அணியையும் வெற்றிகொண்டு 3ஆவது கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

மானிப்பாய் பரீஸ் அணி 2 ஆவது சுற்றில் லிங்ஸ் அணியை வெற்றிகொண்டு 3 ஆவது கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

ஜொலிஸ்ரார் அணி 2 ஆவது சுற்றில் ஸ்ரான்லி அணியை வெற்றிகொண்டு 4 ஆவது இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

யாழ்.ஜொனியன்ஸ் அணி, 2ஆவது சுற்றில் ஓல்ட்கோல்ஸ் அணியை வெற்றிகொண்டு 4ஆவது கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் திருநெல்வேலி சி.சி. அணியை எதிர்த்து விக்டோறியா அணி முதலாவது கால் இறுதிப் போட்டியில் எதிர்கொள்ளும்.

அன்றையதினம் பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணி 2ஆவது கால் இறுதிப்போட்டியில் எதிர்கொள்ளும்.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைகாலை 8.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நியூஸ்ரார் அணியை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் அணி 3ஆவது கால் இறுதிப் போட்டியில் எதிர்கொள்ளும்.

அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்ஜொலிஸ்ரார்அணியை எதிர்த்து யாழ். ஜொனியன்ஸ் அணி4ஆவது காலிறுதிப்போட்டியில் எதிர்கொள்ளும். (கு)

# சுபாஸ் அதிரடிக் கோல் அரையிறுதியில் ஞானமுருகன்



புதிய விடியல் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மயிலங்காடு ஞானமுருகன் அணி உள்நுழைந்தது.

டான் தொலைக்காட்சியின் அனுசரணையில், யாழ். மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து, யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் புதிய விடியல் என்னும் கால் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிக்கு ஊரெழு றோயல் அணி உள்நுழைந்தது.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், பருத்தித்துறை மற்றும் வடமராட்சி ஆகிய லீக்குகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுப்போட்டியானது நடைபெற்று வந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 39 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன. முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று, மயிலங்காடு ஞானமுருகன், புங்குடுதீவு நசரேத், குருநகர் பாடும்மீன், அரியாலை ஐக்கியம், இளவாலை யங்ஹென்றீஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், ஊரெழு றோயல், நவிண்டில் கலைமதி ஆகிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதியாட்டங்களில் மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை யங்ஹென்றிஸ், குருநகர் பாடும்மீன் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதியாட்டம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தை கைக்கொண்டன.

இருந்தும், கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் அனைத்தும் வீணடிக்கப்பட்டன. முதற்பாதியாட்டம் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முடிவடைந்தன.

இரண்டாவது பாதியாட்டத்திலும் கோலடிக்கும் வாய்ப்புக்கள் தவறவிடப்பட்டன. இரண்டாம் பாதியில் ஆக்கிரோஷமான ஆட்டத்தால் ஞான முருகன் அணியின் இரண்டு வீரர்கள் உபாதைக்குள்ளாகி வெளியேறினர். ஆட்டநேர முடிவும்போது, இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை.

வெற்றியாளரைத் தீர்மானிக்க மேலதிக 15 நிமிடங்கள் வழங்கப்பட்டது. இதில் ஞானமுருகன் அணியின் சுபாஸ் கோல் ஒன்றைப் போட்டு, அணியை இறுதிப்போட்டிக்கு ராஜ நடை போட்டு அழைத்துச் சென்றார்.

முடிவில் ஞான முருகன் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் வென்று, இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இந்தத் தொடரின் கடந்த வருடம் ஞானமுருகன் அணி சம்பியனாகியிருந்ததுடன், இந்தவருடமும் இறுதிக்குள் நுழைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கு-25)



கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 20 வயதுப் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் அ.புவிதரன் 4.70 m உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப்பெற்றதோடு புதிய போட்டிச் சாதனையை படைத்ததோடு தங்கப் பதக்கத்தையும் தனதாக்கிக்கொண்டார். 18 வயது ஆண்கள் பிரிவில் அ.பவிதரன் 3.80 m உயரம் பாய்ந்து 2ஆம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பாணுஜன் 3.7 m பாய்ந்து 3ஆம் இடத்தையும் பெற்று வெண் கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

# உதய சூரியனின் போட்டி முடிவுகள்

குருநகர் உதயசூரியன் விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர்கொண்ட Little champion 2018 உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி குருநகர் பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் ஆரம்பமானது. முதல் போட்டியில் Sea star வி.க எதிர் அலைகள் விளையாட்டுக்கழகம்மோதியது. இதில் Sea star 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் New star வி.க எதிர் செல்வமாதா வி.க மோதியது. இதில் New Star வி.க 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-106)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்









கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையம்,கலைவாணி முன்பள்ளி ரேஞ்சஸ் விளையாட்டு கழகம் இணைந்து நடத்திய சித்திரை வருட சிறப்பு நிகழ்வு அண்மையில் கொலின்ஸ் மைதானத்தில் இடம்பெற்றது.நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்ததோடு வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக்கேடயமும் அவற்றோடு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் பிரதம விருந்தினரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## அரசியல் கைதிகளின்...

ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். சில தினங்களுக்கு முன்னர் நான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தேன். அப்போது சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்ற தமது நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

ஆனால் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் தடையாக உள்ள சில காரணங்களை கூறியிருந்தார். அந்த காரணங்கள் ஏற்றுக் கொள்ளகூடியவையாக இல்லை. ஆனாலும் இந்த அரசாங்கத்தை கொண்டே அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். வெறுமனே ஆனந்த சுதாகரனை மட்டுமல்லாமல் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை படுகொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கணவனும் மனைவியும் தடுத்து வைக்கப்பட்டு 17 வருடங்களுக்கு பின்னர் மனைவி விடுதலை செய்யப்பட்டார்.

கணவன் தொடர்ந்தும் சிறையிலேயே இருக்கின்றார். இவர்களுடைய பிள்ளைகள் 17 வருடங்களாக பெற்றோருடன் வாழவில்லை. இப்படி ஒவ்வொரு அரசியல் கைதிக்கு பின்னாலும் ஒவ்வொரு துயரம் நிறைந்த கதை உள்ளது. இதேபோல் அரசாங்கம் தமிழ்தேசிய கூட்டமைப்புடன் சில விடயங்களை விரைவில் பேசவுள்ளதாக அறிந்து கொண்டோம். அதில் அரசியல் கைதிகளின் விடுதலையும் உள்ளடக்கம். ஆகவே தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பதன் ஊடாக அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை தமிழ் மக்களின் வாழ்விடங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கும். 2011-ம் ஆண்டே இதனை நாம் எதிர்த்துள்ளோம். வடகிழக்கு மாகாணங்களின் நிலைமைகள் தொடர்பாக 2011-ம் ஆண்டு 2 அறிக்கைகளை நாங்கள் சமர்ப்பித்துள்ளோம். அதில் இந்த பௌத்த விகாரை அமைப்பு விடயமும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. அதன் பயனாக பல விகாரைகள் அகற்றப்பட்டுள்ளன. ஆனாலும் புதிதாக அமைக்கப்படுவது நிறுத்தப்படவில்லை. இந்நிலையில் பௌத்தர்கள் வாழாத பகுதியில் பௌத்த விகாரைகளை அமைப்பதை நிறுத்தவில்லை.

எனவே அது தொடர்பாக நடவடிக்கை எடுப்போம். மேலும் மகாவலி அதிகாரசபை வடக்கு மக்களுக்கு தண்ணீர் தரட்டும். சிங்கள மக்களை தரவேண்டாம் என நான் நாடாளுமன்றில் கூறியிருக்கின்றேன். அண்மையில் வடமாகாணசபை உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களுக்கு சென்றிருக்கின்றனர். நேற்று மாகாணசபை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்து பேசுவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது பின்னர் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விடயங்களை மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதி தமிழ் தேசிய கூட்டமைப்பு நடவடிக்கைகளை எடுக்கும். கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட நிலைமைகளைப்போல் வடக்கில் ஏற்பட இடமளிக்கப்படாது என்றார். (ம-4)

## கடும் காற்றுடன் மழை...

ஒன்று முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த நெற மைகளும் மழையினால் நனைந்துள்ளது. மற்றும் நகரத்தில் உள்ள 5 கடைகளின் கூரைகள் காற்றினால் தூக்கிவீசப்பட்டுள்ளன. இதேவேளை மல்லாவி பகுதியினை சேர்ந்த விவசாயிகளின் வாழை மரங்கள் மற்றும் மரவள்ளி மரங்கள் என்பன காற்றினால் அடித்து சாய்க்கப்பட்டுள்ளது.

வீசிய காற்றினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து கிராம அலுவலகரிடம் முறையிட்டுள்ளதுடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளார்கள். (ம-15,281)

## புதிய அமைச்சரவை...

கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அமைச்சரவை மாற்றம் குறித்தான பேச்சுகளின்போது தனது இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி நேரடியாகவே தெரிவித்திருக்கிறார் என்று அறியமுடிகின்றது.

இதன்படி அனைத்து அமைச்சுகளின்

## ஆசிரியை தாக்கியதில்...

வன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியா குடியிருப்பு கித்துள் வீதியில் தன்னுடைய இல்லத்தில் தனியார் கல்வி நிலையம் ஒன்றை நடத்தி வரும் பிரபல பாடசாலையில் கற்பித்து வரும் ஆசிரியை ஒருவரிடம் ஒன்பது வயதுடைய தரம் நான்கில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் கடந்த இரண்டு நாட்களாக கல்வி நிலையத்திற்கு சமுகம் தராதமையையடுத்து நேற்றுமுன்தினம் மாணவனை குறித்த ஆசிரியை கண்மூடித்தனமாக தாக்கியுள்ளார்.

ஆசிரியை தாக்கியதில் மாணவனின் மூக்காலும் காதாலும் இரத்த கசிவு ஏற்பட்டதுடன் மாணவனின் கன்னம் கண்டல் காயத்துக்குள்ளாகி மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன் பெற்றோரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியை கடந்த காலங்களிலும் மாணவர்களை கடுமையாக தாக்குகிறார் என்ற குற்றச்சாட்டும் பெற்றோர் மத்தியில் நிலவிவருகிறது. (ம-281)

## மதுபானங்கள், இறைச்சி...

யங்கள் மற்றும் களியாட்ட இடங்கள் ஆகிய இந்த இரண்டு நாள்களும் மூடப்படவுள்ளன.

வெசாக் வைபவத்தை முன்னிட்டு நேற்று முதல் மே மாதம் 2ஆம் திகதி வரையான காலப்பகுதியை வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இதற்கமைவாக ஏப்ரல் மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில் நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளை மூடுவதற்கும் அங்காடி வர்த்தக நிலையங்களிலுள்ள மது விற்பனையை நிறுத்துவதற்கும், இறைச்சிக்காக விலங்குகளை உயிரிழக்க செய்யும் இடங்கள், குதிரை பந்தய நிலையம், கஷினோ மண்டபம், களியாட்ட இடங்களை மூடுவதற்கும், இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கும் , அங்காடி வர்த்தக நிலையங்களிலுள்ள இறைச்சி விற்பனையை நிறுத்த உத்தரவிட்டு அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டதரணி சுதர்ஷன குணவர்தன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## இலங்கையில் அரசியல்...

வொரு அரசியல் கைதியும் இல்லை. எந்தவொரு சிறையிலும் அவ்வாறானவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன், நாட்டில் இரகசிய சிறைச்சாலைகள் இல்லை. அவ்வாறான இரகசிய தடுப்பு முகாங்கள் எவையும் இராணுவ முகாங்களுக்குள்ளேயோ, பொலிஸ் நிலையங்க ளுக்குள்ளேயோ இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (ம)

## வழிபாட்டில் ஈடுபட்ட...

ஆலயத்தின் பக்தர்கள் இரு குழுக்களாக பிரிந்து அடிதடியில் மோதினார்கள்.

முடிமன்னர் ஆலயத்தில் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடைபெற்றுவரும் நிர்வாக ஊழல் முரண்பாடுகளே இம்மோதலுக்கு காரணம் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிப்பதோடு இவ்வாறு நடைபெறும் மோதல் சம்பவங்களால அடிக்கடி இவ் ஆலய சூழலில் பதற்றமும் பலர் காயமடைவதும் தொடர்வதால் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் ஏழாலை மத்தியை சேர்ந்த இருவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-105)

## சிங்கள ஆட்சியாளர்கள்...

இன்றும் இப் பிரச்சினை முடிந்தபாடில்லை. தமிழரசு என்பதும் உருவாகவில்லை. எனவே இன்றைய சூழலிலும் அந்த அபிலாசைகளை விட்டுக் கொடுக்க முடியாது. அதை தொடர்ச்சியாக எடுத்துச் செல்லவேண்டும். தமிழர் தாயகத்தை நாம் மறந்து விடமுடியாது. தற்போதைய அரசை நாம் பல்வேறு வகையிலும் நிர்ப்பந்திக்க வேண்டியிருக்கின்றது என தெரிவித்துள்ள நவசமசமாஜா கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண,

இலங்கையில் சிங்கள மொழி மாத்திரமே அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்று எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க செயற்பட்டபோதிலும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு முக்கியம் என்ற கொள்கையை அங்கீகரித்து பண்டா செல்வா ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டிருந்தார். ஆனால் இடது சாரிகள் அவ் ஒப்பந்தத்தை பாதுகாக்க முன்வராமல் அவர்கள் மேற்கொண்ட பாரிய தவறுகள் தான் இன்றிருக்கும் நிலைமையை ஏற்படுத்திவிட்டுள்ளது. இடது சாரிகள் இத் தவறுகளை செய்யாது அன்று அவ் ஒப்பந்தத்தை பாதுகாக்க முன்வந்திருந்தால் இலங்கையின் வரலாறு வித்தியாசமானதாக அமைந்திருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அதிகாரப் பகிர்வு பிரச்சினையானது எவ்வாறு தீர்வு காணப்பட்டதோ அதேபோன்று இலங்கையிலும் அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வினை நிலைநாட்ட நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட திடசங்கற்பம் பூணவேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவு தினமானது நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு நினைவு பேருரையாற்றும் போதே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தமிழ் மக்களின் தந்தை தமிழ்த் தேசிய இனத்தின் தந்தை என்று தந்தை செல்வா அழைக்கப்பட்டிருந்தார். அவரது அரசியல் வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்டபோது தான் தமிழ் மக்களின் தேசிய இனம் என்பது ஆரம்பிக்கப்பட்டதா என்ற கேள்வி எழுகின்றது. சிங்கள மக்கள் தங்கள் தேசிய இனமானது சிங்க பாபுவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது என்று கூறுகின்றார்கள். தேசிய இனம் என்பது அண்மைக்கால வரலாற்றில் தோற்றம் பெற்ற எண்ணக்கருவும் செயற்பாடும் ஆகும். முதலாளித்துவம் என்பது வளர்ச்சி அடைந்த பின்னரே தேசிய இனம் என்பது வலுப்படத் தொடங்குகின்றது.

இலங்கையில் 1900 ஆண்டுகளின் பின்னரே தமிழர்கள் தேசிய இனமாக உருவாக்கம் பெறுகின்றார்கள். ஆனால் இந்தியாவில் அதற்கு முன்னரே உருவாக்கம் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாகவே அதனை வலியுறுத்தி ஈ.வே.ரா பெரியார் போன்றோர் தலைமை தாங்கி போராட்டங்களை நடத்தினார்கள்.

இடது சாரிகள்மேற்கொண்ட பாரிய தவறுதான் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைப் பாதுகாக்க முடியாது போனது. அப்படி பாதுகாத்திருந்தால் இன்றைய நிலைமையை நாங்கள் சந்தித்திருக்க தேவையில்லாது போயிருக்கும். இதன் பின்னர் இந்தத் தோல்விகளை பொறுமையாகத்தாங்கிக் கொண்டு செயற்பட்ட செல்வா 1965 ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது இதனையும் இடது சாரிகளே கடுமையாக எதிர்த்தார்கள் இரண்டு தடவைகள் செல்வநாயகமும் தோற்ற போதும் அவர் பொறுமையுடன் இருந்து தன் நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஒருபோதும் அவர் தன் கொள்கைகள் கோட்பாடுகளை இடையில் கைவிட வில்லை. மகாத்மாகாந்தி போன்று அமைதியான போராட்டங்களையே மேற்கொண்டார்.

சிங்கள ஆட்சியாளர்கள் எப்போதும் தமது ஆதிக்கத்தின் கீழேதான் மற்றவர்கள் அடிபணிந்து செயற்படவேண்டும் என்ற நோக்கிலே செயற்படுகிறார்கள். இன்றும் இப் பிரச்சினை முடிந்தபாடில்லை. தமிழரசு என்பதும் உருவாகவில்லை. எனவே இன்றைய சூழலிலும் அந்த அபிலாசைகளை விட்டுக் கொடுக்க முடியாது. அதை தொடர்ச்சியாக எடுத்துச் செல்லவேண்டும். தமிழர் தாயகத்தை நாம் மறந்து விடமுடியாது. தற்போதைய அரசை நாம் பல்வேறு வகையிலும் நிர்ப்பந்திக்கவேண்டி யிருக்கின்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னால் இன வாதிகள் மத வாதிகள் எல்லோரும் வெறியர்கள் போல் நடந்துகொண்டார்கள். ஆனால் அதனை எல்லோரும் இணைந்து தோல்வியுற செய்தோம். அதேபோல் எதிர்காலத்திலும் எங்கள் பயணம் ஒன்றிணைந்து அமையவேண்டும். இந்தியாவில் எப்படி இப் பிரச்சினை தீர்வு காணப்பட்டதோ அதேபோன்று இலங்கையிலும் அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வு நிலைநாட்டப்பட நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட திடசங்கற்பம் பூண வேண்டும் என்றார். (ம-4)

## மத்திய வங்கியின்...

நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி மத்திய வங்கியின் அறிக்கையை நிதியமைச்சரிடம் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி சமரதுங்க, மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ம)

## புலிகளின் செயற்பாடு...

பணித்தது என அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இறுதிப் போரில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களின் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவே யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் நினைவுத்தூபி அமைக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும் அதனை இடைநிறுத்த கொழும்பு பணித்திருந்தது.

வடக்கில் அண்மைய நாள்களாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. அங்கு புலி சார்புச் செயற்பாடுகள் எந்தவொரு தங்கு தடையுமின்றி முன்னெடுக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தோருக்கு சிலைகள் அமைக்க முயல்கிறார்கள். சில இடங்களில் விடுதலைப் புலிகளின் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்தச் செயற்பாடுகளால் நாட்டில் மீண்டும் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. அவற்றை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்று பௌத்த பிக்கு அமைப்புக்கள் சில இணைந்து ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளன. (ம)

## மக்களை பிழையாக...

அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன. அந்த நிறுவனங்களால் சாதாரண மக்கள் பிழையாக வழிநடத்தப்படுகின்றனர். இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வடக்கில் காணாமற்போனோரின் உறவுகள் தமது தொலைந்த அன்பான உறவுகளை மீட்டுத் தருமாறு கோரி போராட்டம் நடத்துவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

போரின் போது இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட மக்களின் காணிகளில் 80 வீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன. அண்மையில் புத்தாண்டை முன்னிட்டு 560 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. அவை தொடர்பில் எவருமே பேசிக் கொள்வதில்லை.

எனவே சிலர் சுயலாபத்துக்காக பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்றனர் என்று ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார். (ம)

## நல்லாட்சி அரசாங்கம்...

யில் முழுமைபடுத்தப்படவில்லை என நவசமசமாஜகட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நல்லாட்சியும் தமிழர்களுக்கு வழங்குவதாக கூறிய சுயநிர்ணயத்தை இதுவரையில் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை என்பதே எனது எண்ணம்.

எனவே இதற்காக இன்னும் தமிழர் தரப்பு போராட வேண்டியுள்ளது. தற்போது புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனூடாக முழுமையான அதிகாரங்களை வழங்குவதாக அரசாங்கம் உறுதி வழங்கியுள்ளது. எனவே அதற்கமைய அரசாங்கம் செயற்படும் என எதிர்பார்க்கின்றேன்.

இதற்காகவே நல்லாட்சியுடன் இணைந்து தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன. அதேபோல் இதனைக் கருத்தில் கொண்டு தான் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பை தெரிவித்திருந்தன.

எனவே செல்வநாயகம் அவர்களின் இலக்கை அடைய இன்னும் போராட வேண்டியுள்ளது. அதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## யுவதியின் தலை...

ஒருவரும் வடமராட்சி பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவரும் பேஸ்புக் வழியாக காதலித்து வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்ட நிலையில் வலிகாமம் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் நேற்று முன்தினம் தான் காதலித்த அந்த யுவதியின் வீட்டுக்குச் சென்று அவரின் தலைமுடியை வெட்டியுள்ளார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட யுவதி இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (மு-60)

சாவகச்சேரியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில், நெல்லியடி.
076 443 1576

வீடு விற்பனைக்கு
வல்வெட்டித்துறை நெடியகாடு பிரதேசத்தில் அமைதியான சூழலில் அமைந்துள்ள 1 1/4 பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு.
(3767)
தொடர்பு:- 077 164 9545

நெருங்கிறது பரீட்சை...
வடக்கு MA வழிகாட்டி
வெளிவந்து விற்பனையாகின்றது
தொகுப்பு சி.என்.எச். சாள்ஸ்
யாழ். நகரில் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட வட மாகாணத்தின் முன்னணி புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
077 691 3337

கிளிநொச்சியில்:- முதன் முறையாக
விசேட கருத்தரங்கு
முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை (MA)
BY. P.கமல்தாசன் & வளவாளர் குழு
30.04.2018, 06.05.2018
09.00 A.M - 02.00 P.M
கம்பன் கல்லூரி, கனகபுரம் வீதி, சிவபூமி பாடசாலை அருகில்.
T.P:- 077 5483470, 077 5265344
(அனுமதிகள் அன்று வழங்கப்படும்.)
(3772)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகள்
சட்டமாணி நுழைவு
வட மாகாண ஆசிரியர் தெரிவு
மத்தியவங்கி முகாமைத்துவ பயிலுநர் தெரிவு
சகல பரீட்சைகளுக்கும் சனி, ஞாயிறு தினங்களிலும் ஏனைய நாட்களில் மாலை நேரங்களிலும் வகுப்புக்கள் யாழ். நகரில் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு 0766883394

ஆடம்பர வசதியுடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு
யாழ்.நகரில் இருந்து 4 KM தூரத்தில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
● திருமண நிகழ்வுகள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளி மாவட்டத்திலிருந்து வருபவர்கள் மற்றும் ஏனைய சுப நிகழ்வுகளுக்கு வருபவர்கள் தங்குவதற்குரிய சகல வசதிகளுடன் உண்டு.
A/C, NON A/C, தளபாட வசதிகள், சமையல் பாத்திரங்கள், எலெக்ரோனிக் உபகரணங்கள் என அனைத்து வசதிகளுடன் உண்டு.
(C-2416) [ 30 பேர் வரை தங்கக் கூடியவசதி ]
தொடர்புகளுக்கு :- 077 110 4770

BRILLIANT MATHS ACADEMY
தரம் 6 தொடக்கம் 11 வரையான கணித குழு வகுப்புக்கள் (தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான) 28.04.2018 சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. முற்று முழுதாக மாதிரி வினாத்தாள்களினூடு சிறந்த முறையில் நவீன தொழில் நுட்பத்தினூடு கற்பிக்கப்படும்.
Mr.S.Tharshan 077 4540529
NO.1 சங்கிலியன் வீதி, நல்லூர். புகையிரத வீதி, இணுவில் கிழக்கு
Gr 6 - மு.ப 8-9
Gr 7 - மு.ப 9-10 Gr 9 - பி.ப 1-2
Gr 8 - மு.ப 10-11 Gr 10 - பி.ப 12-1
விரைவில் O/L மாணவர்களுக்கான Paper Class ஆரம்பிக்கப்படவுள்ளது.
(3771)

தரம் 10, 11 வணிகக்கல்வியும் கணக்கீடும் A/L கணக்கீடு
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
பிரத்தியேக மற்றும் குழுவகுப்புக்கள்
இடம் - கந்தர்மடச்சந்தி, கொழும்புத்துறை
தொடர்புகளுக்கு 077 216 8884

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550/=Kg
நெதர்லாந்து - 700/=Kg (Holland)
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு 0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

# மரண அறிவித்தல்

## Dr.சிவகுரு வேலாயுதம்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சிவகுரு வேலாயுதம் நேற்று முன்தினம் (25.04.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வேதநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், வைதேகி, வாசுகி (ஆசிரியை - யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமரன் (பௌதிகவியல் ஆசிரியர் - New Science World, யாழ்ப்பாணம்), Dr.இராகவன் (யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தக்ஷி, சஜீவ், கேஷகி, அக்ஷத் ஆகியோரின் ஆசை அம்மப்பாவும், காலஞ்சென்ற மீனாட்சி மற்றும் இராசம்மா, தங்கமணி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சரஸ்வதி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி, கெங்காதரன், சுந்தரமூர்த்தி மற்றும் அம்பலவாணர், தனபாலசிங்கம், சுமதி, காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, சத்தியமூர்த்தி மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"நிமலகம்"
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே: 021 226 3003
(C-2411)

# கண்ணீர் அஞ்சலி



## Dr.சிவகுரு வேலாயுதம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16.05.1947 | 25.04.2018 |

எமது பேராசான் திரு.R.குமரன் அவர்களின் அன்பு மாமனார்

**சிவகுரு வேலாயுதம்**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**New Science World சமூகம்**
(சி-2413)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.